REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
2022 ஜுலை 11 திங்கட்கிழமை
1932 - 2022

வரு. 90 இல. 161 | Monday 11, July, 2022 | 12 பக்கங்கள் | 40/-



### எரிவாயுவுடன் வந்துள்ள கப்பல்;
## துரிதமாக மக்களுக்கு வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவு

**ஜனாதிபதி பணித்துள்ளதாக ஊடகப்பிரிவு அறிக்கை**

சமையல் எரிவாயு கப்பல் ஒன்று இலங்கை கடற்பரப்புக்குள் வந்துள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த கப்பல் நேற்று (10) பிற்பகல் 3 மணிக்கு கெரவலப்பிட்டியை வந்தடைந்தவுடன் எரிவாயுவை இறக்கி விநியோகிக்கும் பணிகளை மேற்கொள்ளுமாறு

04

### சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டு
## பெரும்பான்மை பலத்தை அறிவித்த பின்னர் பிரதமர் பதவியிலிருந்து விலகல்



**அதுவரை முக்கிய பணிகளை பிரதமராகவே முன்னெடுப்பேன்**

சர்வகட்சி அரசொன்று அமைக்கப்பட்டு பெரும்பான்மைப் பலத்தை நிருபித்ததன் பின்னர் பிரதமர் பதவியிலிருந்து விலகவுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

04

## ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலுக்கு கண்டனம்

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிக்கை**



ஊடகவியலாளர்கள் மீது பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் நடத்திய கொடூரமான மனிதாபிமானமற்ற தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

விசேட ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் இவ்வாறு

04

## ஊடகவியலாளர்களை தாக்கிய அதிகாரிகள் மீது நடவடிக்கை

**பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ**



குருந்துவத்தை பிரதேசத்தில் உள்ள பிரதமரின் இல்லத்திற்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போராட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை தாக்கிய பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

04

# ஜனாதிபதி கோட்டாபய 13 ஆம் திகதி இராஜினாமா

## தன்னிடம் தெரிவித்துள்ளதாக சபாநாயகர் தெரிவிப்பு



**நாட்டில் அமைதியான சூழலை முன்னெடுத்துச் செல்ல சகல மக்களதும் ஒத்துழைப்பு அவசியம்**

*லோரன்ஸ் செல்வநாயகம்*

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 13ஆம் திகதி தமது பதவியை இராஜினாமா செய்யப் போவதாக தெரிவித்துள்ளார். கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள

04

## எதிர்கால அரசியல் செயல்பாடுகள் குறித்து முக்கிய கட்சித் தலைவர்கள் கூட்டம்

**சபாநாயகர் தலைமையில் இன்று நடைபெற ஏற்பாடு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*

நாட்டின் எதிர்கால அரசியல் தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளும் முக்கிய கட்சித் தலைவர்கள் கூட்டம் இன்று

04



ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவி விலகக் கோரி கொழும்பை ஆக்கிரமித்த மக்கள் வெள்ளம் காலி முகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்தில் போட்டப்பட்டிருந்த பலத்த பாதுகாப்பு கட்டமைப்புக்களை தகர்த்தெறிந்து ஜனாதிபதி செயலகத்தை ஆக்கிரமித்த போது பிடிக்கப்பட்ட படம்.



பறகஹதெனிய ஜாமிஉத் ஜும்ஆப் பள்ளிவாசலின் ஏற்பாட்டில் புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நடைபெற்றது. மௌலவி ஹிபுலுர் ரஹ்மான் தொழுகையினை நடத்தி வைத்ததோடு எஸ்.எச்.எம். இஸ்மாயீல் மார்க்கச் சொற்பொழிவினை நிகழ்த்தினார்.

படம் மாவத்தகம தினகரன் நிருபர்

## பிரதமரது இல்லத்துக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் மூவர் கைது

- விசாரணைகள் CIDயினரிடம்
- மூவருக்கும் 20 வரை விளக்கமறியல்
- தீயணைப்பு வாகனத்துக்கு இடையூறு
- முழுவீடும் முற்றாக எரிந்து நாசம்
- சன்னவின் வீட்டில் தங்கம் கொள்ளை
- உத்தியோகபூர்வ BMC காரும் எரியுண்டது

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் இல்லத்திற்கு தீ வைத்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

04

## தீர்வினை காண்பதற்கு விரைவாக செயற்படுங்கள்

**இலங்கை தலைவர்களிடம் USA வேண்டுகோள்**



நீண்டகால தீர்வுகளை காண்பதற்கான துரிதமான நடவடிக்கைகளில் இலங்கை அரசியல் தலைவர்கள் ஈடுபடவேண்டும் என அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறி பின்னர் தனது பதவி விலகலை அறிவித்துள்ள நிலையிலேயே அமெரிக்கா இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இவ்வேளையில் இலங்கை பாராளுமன்றம் இந்த தருணத்தை நாட்டின் மேம்பட்ட நிலைக்கான அர்ப்பணிப்பை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும், தனியொரு அரசியல் கட்சியை

04

### 147 பேரை பலிகொண்ட சம்பவம்;
## யாழ்.நவாலி தேவாலய 27ஆம் ஆண்டு நினைவு தினம்

**09 ஆம் திகதி உணர்வு பூர்வமாக அனுஷ்டிப்பு**



*சுமித்தி தங்கராசா*

யாழ்ப்பாணம், நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 27 ஆம் ஆண்டு நினைவுதினம் 09 ஆம் திகதி சனிக்கிழமை மாலை சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நினைவு கூரப்பட்டது.

04

## லிற்றோ GAS விலை 50 ரூபாவால் அதிகரிப்பு?

**நிறுவனத் தலைவர் முதித்த தெரிவிப்பு**



லிற்றோ கேஸின் விலை மீண்டும் அதிகரிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்காலத்தில் எரிவாயு சிலிண்டரின் விலையை 50 ரூபாவால் அதிகரிக்கவுள்ளதாக லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு கொள்கலன் ஒன்றின் விலை சுமார் 200 ரூபாவால் அதிகரிக்கப்பட வேண்டிய நிலை உள்ளது. எனினும், மக்கள் படும் இன்னல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி 50 ரூபாவால் மட்டுமே விலையை அதிகரிக்க

04

### ஜுலை 09 சம்பவத்தின் எதிரொலி;
## நான்கு அமைச்சர்கள் தமது பதவி விலகல் குறித்து அறிவிப்பு

**ஹரின், மனுஷ, அமரவீரவுடன் தம்மிக்கவும் இணைவு**



*லோரன்ஸ் செல்வநாயகம்*

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 13 ஆம் திகதி ஜனாதிபதி பதவியில் இருந்து தாம் விலகப்போவதாக அறிவித்துள்ள நிலையில் அமைச்சர்கள் சிலரும் தமது பதவிகளை இராஜினாமா செய்வதற்கு தீர்மானித்துள்ளனர்.

04

### ஜுலை 09 ஆர்ப்பாட்ட சம்பவம்;
## 11 ஊடகவியலாளர்கள் உட்பட 103 பேர் காயம்

**55 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில்**

ஜனாதிபதியை பதவி விலகக் கோரி நேற்று முன்தினம் (09) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற சம்பவங்களில் 103 பேர் காயமடைந்துள்ளனர்.

அவர்களில் பலர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதாகவும், மேலும் 55 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்களில் 11 ஊடகவியலாளர்களும் 05 பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை,

04

## 44,000 மெ. தொன் யூரியா உரம் நாட்டை வந்தடைந்தது

**இன்று முதல் விவசாயிகளுக்கு விநியோகம்**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



இந்திய கடன் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ள முதலாவது தொகை யூரியா உரத்தை தாங்கிய கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

மேற்படி கப்பலில் 44,000 மெட்ரிக் தொன் யூரியா உரம் உள்ளதாகவும் இந்திய உயர் ஸ்தானிகரால் விவசாய அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் அந்த உரம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. அதேவேளை பெரும்பாலும் மேற்படி

04

## இலங்கையுடன் உடன்படிக்கையை ஏற்படுத்த மீண்டும் பேச்சுவார்த்தை

**ஆரம்பிக்க வேண்டுமென IMF தெரிவித்துள்ளது**



இலங்கையுடன் ஒரு உடன்படிக்கைக்கு வருவதற்கு பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் (IMF) தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூயர் மற்றும் இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் தலைமை அதிகாரி மசாஹிரோ நோசாகி ஆகியோர், இலங்கையில் நடைபெற்று வரும் நிகழ்வுகளை சர்வதேச நாணய நிதியம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் தீர்வு கிடைக்கும் என்று தாம் நம்புவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இது, சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் தொடர்பான, உரையாடலை மீண்டும் ஆரம்பிக்க அனுமதிக்கும்

04

## பிரதமரின் வீட்டுக்கு தீ வைத்த சம்பவம்

**எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது**



பிரதமர் ரணில் விக்ரமசிங்க தனிப்பட்ட வீடு தீக்கிரையக்கப்பட்டது நியாயப்படுத்த முடியாதது என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,..

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் நிலை தவறானதாக இருந்தாலும் அவரின் தனிப்பட்ட வீடு தீக்கிரையாக்கப்பட்டது நியாயப்படுத்த முடியாதது. அவர் கற்ற கொழும்பின் பிரபல கல்லூரிக்கு உடமையாக செல்லவிருந்த, பெருந்திரளான புத்தகங்களை கொண்ட ஓர் அறிவு சார் உடமை தீக்கிரையாக்கப்பட்டது

04

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 ஜூலை 11 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

**தொழுகை நேரம்**

11 முதல் 18வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.39 |
| லுஹர் | 12.17 |
| அஸர் | 03.44 |
| மஃரிப் | 06.32 |
| இஷா | 07.48 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆனி 27

ராகுகாலம் : பகல் : 7.30 - 9.00வரை
சுபநேரம் : காலை : 6.00 - 7.30வரை

யோகம்: சித்தஅமிர்த யோகம்

திதி: திரையோதசி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | முயற்சி |
| மிதுனம் | போட்டி |
| கடகம் | வெற்றி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | தனம் |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | சுகம் |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | பாராட்டு |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

ஜனாதிபதி மாளிகையிலிருந்து மீட்கப்பட்ட

# ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பணம் பொலிஸாரிடம் கையளிப்பு

ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயன்படுத்தியதாக நம்பப்படும் அறையொன்றிலிருந்து நேற்று (09) ஆர்ப்பாட்டக்காரர்களால் மீட்கப்பட்ட, ஒரு கோடியே 78 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை கணக்கிட்டு, அங்கு கடமையிலிருந்த விசேட அதிரடிப் படை பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அப்பணத்தை கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பின்னர் அங்கு வந்த கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பணத்தை பெற்றுக் கொண்டு பணத்தைக் கண்டுபிடித்து எண்ணுவதற்கு உதவிய ஐந்து பேரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர் பணத்தை கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அதன் பின்னர் மேல்மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பணத்தை சட்டம் ஒழுங்குக்கு பொறுப்பான அமைச்சர் டிரான் அலஸிடம் ஒப்படைக்குமாறு கூறினார்.

எவ்வாறாயினும், கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சாகர லியான், பொலிஸ்

மாஅதிபர் சி.டி.விக்ரமரத்னவிடம் இது தொடர்பில் அறிவித்தபோது, பணத்தை யாரிடமும் ஒப்படைக்காமல் பொலிஸாரின் காவலில் வைத்திருக்குமாறு பொலிஸ் மாஅதிபர் தெரிவித்தார்.

இது தொடர்பான அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ள இளம் ஊடகவியலாளர்கள் ஒன்றியம், இந்த நிலைமையை தெளிவுபடுத்தி வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிடுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரிடம் கேட்டுக் கொள்கிறது.

04

பிரதமர் ரணிலின் இல்லத்திற்கு தீ

# உலக நாடுகள் பலவும் கவலை, கண்டனம்

## சந்திரிக்காவும் கண்டனம் தெரிவிப்பு



கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்லம் தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கண்டனம் தெரிவித்துள்ளதோடு, நோர்வே மற்றும் ஆப்கானிஸ்தான் என்பன கவலை வெளியிட்டுள்ளன.

ஜுலை 09 ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் கொழும்பு குறுந்துவத்தை பகுதியில் அமைந்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்ல வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சிறிது நேரத்தின் பின்னர் வீட்டின் மீது தாக்குதல்களையும் மேற்கொள்ளத் தொடங்கினர்.

இதனால் பிரதமரின் இல்ல வளாகத்தில் பொலிஸார் மற்றும் முப்படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். அத்தோடு ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்த கலைப்பதற்காக கண்ணீர்ப்புகை பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. எவ்வாறிருப்பினும் அங்கிருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து செல்லவில்லை.

இதனையடுத்து பிரதமரின் இல்லத்திற்கு தீ மூட்டப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியதோடு தீப்பற்றியெறியும் காணொளி பதிவுகளும் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டன. இதன் போது பிரதமர் பிரத்தியேக இல்லத்தில் அமைக்கப்பட்டிருந்த நூலகமும் தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

04

# இடைக்கால அரசாங்கத்தை உருவாக்க இடமளிப்பதே மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டு மக்கள் எதிர்பார்க்கும் சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தை உருவாக்குவதற்கு இடமளிப்பதே மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பாகுமென ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

திறமையற்ற நிர்வாகம் காரணமாகவே நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை சந்திக்க நேர்ந்துள்ளதாகவும் அரசியலமைப்பிற்கிணங்க மக்கள் நம்பிக்கைக்குரிய உறுப்பினர்களை தெரிவு செய்ய இடமளிக்கப்பட வேண்டும் எனவும்

04

அமைதியை நிலைநாட்ட ஒத்துழைக்கவும்;

# பாதுகாப்பு தரப்பினருக்கு ஆதரவளிக்க கோரிக்கை

## மக்களிடம் சவேந்திர சில்வா வேண்டுகோள்



அமைதியை நிலைநாட்ட ஒத்துழைக்கவும் என பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கு மக்களின் ஆதரவு மிகவும் அவசியமானது எனவும் அதற்காக அனைத்து இலங்கையர்களும் பாதுகாப்பு தரப்பினருக்கு ஆதரவளிக்குமாறும் சவேந்திர சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் நிலவும் நெருக்கடியை அமைதியான முறையிலும், அரசியலமைப்பு முறையிலும் தீர்க்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இத்தருணத்தில் நாட்டின் அமைதியைப் பாதுகாக்க படையினருக்கும் பொலிஸாருக்கும் தேவையான ஆதரவை வழங்குமாறு அவர் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை அமைதியான முறையிலும் அரசியலமைப்பின் பிரகாரம் தீர்த்து வைப்பதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ள இத்தருணத்தில், நாட்டின் அமைதியை நிலைநாட்டுவதற்கு இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு ஆதரவளிக்குமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற ஜனநாயகத்திற்கிணங்க:

# எதிர்க்கட்சித் தலைவரே மாற்று பிரதமராக பதவி வகிப்பார்

## ராஜித சேனாரத்ன எம்.பி தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு இணங்க ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகிய பின்னர் எதிர்க்கட்சித் தலைவரே மாற்றுப் பிரதமராக நியமிக்கப்படுவார் என ராஜித சேனாரத்ன எம்.பி தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருடன் இணைந்து மக்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு விளக்கமளிக்கும் போதே ராஜித சேனாரத்ன எம்.பி இவ்வாறு தெரிவித்துள்ளார். நாட்டில் தற்போது ஜனாதிபதியும் பிரதமரும் செயல்படாத நிலையில் மாற்று பிரதமராக எதிர்க்கட்சித் தலைவரே இருக்க வேண்டும். எந்த ஒரு நாட்டிலும் பாராளுமன்ற ஜனநாயகத்திற்கிணங்க எதிர்க்கட்சித் தலைவரே மாற்று பிரதமராக நியமிக்கப்படுவார்.

உலகில் எந்த ஒரு நாட்டிலிருந்தும் தலைவர் ஒருவர் நாட்டுக்கு வருகை தரும் போது அவர்கள் பிரதமரை சந்தித்த பின்னர் எதிர்க்கட்சித் தலைவரையும் சந்தித்து விட்டுதான் செல்வர்.

நாம் எதிர்க்கட்சித் தலைவருடன் இணைந்து நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். நாம் அனைவரும் இணைந்து அதிகாரங்களை பகிர்ந்து முடிந்தளவு விரைவாக அரசாங்கம் ஒன்றை அமைப்போம். மக்களை துன்பகரமான நிலையில் இருந்து அவர்களை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதே எமது நோக்கம். இதற்கான முடிவு பாராளுமன்றத்தின் மூலமே பெற்றுக் கொள்ளப்படும். அவ்வாறில்லாமல் நாட்டை அராஜகத்திற்கு உட்படுத்தி ஆப்கனிஸ்தான், சூடான் போன்ற நிலைக்குத் தள்ள இடமளிக்க முடியாது.

பொறுப்புள்ள அரசியல்வாதிகளாக அராஜகத்தில் இருந்து நாட்டை மீட்டு நாட்டு மக்களின் துன்பங்களிலிருந்து அவர்களை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் விநியோகத்தை மீண்டும் ஆரம்பித்த IOC

## திருமலையில் 24 மணிநேரமும் விநியோகம்

தொடர் எரிபொருள் விநியோகத்தை நிறுத்தி வைத்திருந்த லங்கா ஐஓசி நிறுவனம் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

அதன் பிரகாரம் நேற்று (10) முதல் மீண்டும் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், திருகோணமலை எரிபொருள் முனையம் 24 மணி நேரமும் இயங்கும் என லங்கா ஐஓசி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை பார்வையிட்ட இலங்கை துணை உயர்ஸ்தானிகர்





ஈரோடு மாவட்டம், பெருந்துறை சானடோரியத்தில் உள்ள அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை, 'குறுகிய காலத்தில் ப்ரீகாஸ்ட் கான்கிரீட் தொழில்நுட்பத்தால் கட்டப்பட்ட மிகப்பெரிய மருத்துவமனை' என்ற சாதனையைப் படைத்துள்ளது.

சுமார் 70000 சதுர அடியில் 401 உள்நோயாளிகள் படுக்கை வசதியுடன் கூடிய இந்த மருத்துவமனை, டீமேஜ் பில்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் மே 18 முதல் ஜூலை 1, 2021 வரை 45 நாட்களில் கட்டப்பட்டது.

சென்னையில் உள்ள இலங்கையின் துணை உயர்ஸ்தானிகர் டாக்டர். டி. வெங்கடேஷ்வரன் இந்த சாதனை மருத்துவமனைக்கு கண்காணிப்பு விஜயம் செய்தார். இந்த விஜயத்தில், துணை உயர்ஸ்தானிகர் புதிதாக கட்டப்படும் வார்டு வளாகத்தின் செயல்முறை மற்றும் முன்னேற்றத்தையும் பார்வையிட்டார். ப்ரீகாஸ்ட் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மருத்துவமனை. மேலும், இலங்கையிலும் இதேபோன்ற முதலீட்டை ஆரம்பிக்குமாறு பிரதி உயர்ஸ்தானிகரால் வைத்தியசாலையின் நிர்வாகத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டது, அது பாராட்டத்தக்க வகையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

புதிய பிரதமர், ஜனாதிபதியை நியமிப்பது தொடர்பில்:

# ஸ்ரீல. சுதந்திரக் கட்சி 10 யோசனைகள்

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் தற்போதைய நிலை தொடர்பிலும் ஜனாதிபதி பிரதமரை தெரிவு செய்வது தொடர்பிலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன 10 யோசனைகளை முன்வைத்துள்ளார்.

பத்து யோசனைகளுடனான அறிக்கையொன்றை நேற்று அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் வெளியிட்டுள்ளார்.

அந்த யோசனைகளில் முதன்மையாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உடனடியாக பதவி விலக வேண்டும் என்றும் பதில் ஜனாதிபதியாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதை வேளை, உத்தேச சர்வ கட்சி இடைக்கால அரசாங்கத்தை உருவாக்குவதற்காக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சியின் தலைவர்களைக் கொண்ட தேசிய நிறைவேற்று சபை அல்லது தலைமைத்துவ சபை ஒன்றை ஸ்தாபிக்க வேண்டும் என்றும் அவர் அந்த யோசனையில் குறிப்பிட்டுள்ளார்.

அத்தகைய நிறைவேற்று சபை அல்லது தலைமைத்துவ சபையில் சிவில் செயற்பாட்டாளர்கள், கல்விமான்கள், தொழில்சார் நிபுணர்களின் இணக்கப்பாட்டுடன் ஜனாதிபதி மற்றும் பிரதமர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயன்ற 67 பேர் கைது

மட்டக்களப்பு வாழைச்சேனை கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 67 பேர் கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 11 சிறுவர்களும் 6 பெண்களும் அடங்குகின்றனர்.கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களில் படகு ஓட்டுநரும் மக்களிடம் பணத்தை பெற்றுக்கொண்ட முகவரும் தவிர்ந்த ஏனையவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

04

# ரயில் கட்டண அதிகரிப்பு ஒத்திவைப்பு -ரயில்வே திணைக்களம்

லோரன்ஸ் செல்வநாயகம்

இன்று நள்ளிரவு முதல் நடைமுறைப்படுத்தவிருந்த ரயில் கட்டண அதிகரிப்பு ஒத்திப் போடப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

கால வரையறையின்றி ரயில் கட்டண அதிகரிப்பு ஒத்திப் போடப்பட்டுள்ளதாகவும் அந்த திணைக்களத்தின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

ரயில் கட்டண அதிகரிப்புக்கான வர்த்தமானி அறிவித்தல் அச்சிடும் பணிகளுக்காக அரசாங்க அச்சகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் பஸ் கட்டணத்தோடு ஒப்பிடுகையில் அரைவாசியாக ரயில் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளவும் அதன் மூலம் யோசனைகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அதற்கமைய ஆகக்குறைந்த கட்டணமான பத்து ரூபாவை 20 ரூபாவாக அதிகரிப்பதற்கு அதன் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

'மனித சுதந்திரத்தை போன்றதே ஊடக சுதந்திரமும்'

# ஊடகவியலாளர்கள் தாக்குதலை வன்மையாக கண்டிக்கிறேன்



'சக்தி' மற்றும் 'சிரச' தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்கள் நால்வர் மீது, பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

ஒரு நாட்டின் தனி மனித சுதந்திரத்தை போன்றதே ஊடக சுதந்திரமும். நாட்டின் அனைத்து விதமான தகவல்களையும் மக்களுக்கு வழங்குவதில் பெரும் பங்காற்றி வருகின்றனர் ஊடகவியலாளர்கள்.

அந்த வகையில் இவ்வாறு ஊடகவியலாளர்கள் மீதான மிலேச்சத்தனமான தாக்குதலை நான் வன்மையாக கண்டிக்கின்றேன். மேலும் எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமல் இருக்க நாட்டின் ஊடகச் சுதந்திரமும், ஊடகச் சட்டமும் முறையாக இயங்க வேண்டும். பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் அனைவரும் விரைவில் குணமடைய வேண்டும் என்றும் தெரிவித்தார்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |





உடப்பு பள்ளிவாசலில் ஹஜ்ஜுப் பெருநாள் விஷேட தொழுகைகள் இடம்பெற்றபோது... (படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

# மரக்கன்று நாற்று மேடைகளை அமைக்கும் வேலை திட்டம்



*( திறப்பனை தினகரன் நிருபர் )*

*அநுராதபுரம் மாவட்ட செயலக வளாகத்தில் உள்ள புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தின் அநுராதபுரம் அலுவலகம் ஊடாக 2019 ஆம் ஆண்டு தொடக்கம் மிகவும் வெற்றிகரமான முறையில் மரக் கன்று நாற்று மேடைகளை அமைக்கும் வேலை திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அநுராதபுரம் மாவட்டத்தின் பிரதான விகாரைகள், ஆலயங்கள் மற்றும் நிறுவனங்களில் பெருமளவிலான மரக்கன்றுகள் நடப்பட்டு அவை தற்சமயம் பராமரிக்கப்பட்டும் வருகின்றன என பிரதேச சுரங்க பணியாக பொறியியலாளர் கருணானந்தா தெரிவித்தார்.*

*(இலுப்பை, மதுர, புலு, தாண்டி, கரந்த, வேப்பை , போன்ற பெறுமதிமிக்க மரங்கள் இங்கு நடப்படுகின்றன. முக்கியமாக மிஹிந்தலை கலுதிய குளத்தைச் சுற்றி 150 இலுப்பை மர கன்றுகளும், ருவன்வெலி சாயாவைச் சுற்றி 285 இலுப்பை மர கன்றுகளும், அநுராதபுர உடமலுவயைச் சுற்றி 210 இலுப்பை மர கன்றுகளும், இசுருமுனிய பகுதியில் 72 இலுப்பை மர கன்றுகளும்,அநுராதபுர அட்டமஸ்தான பகுதி ஒவ்வொரு ஆலயத்திலும் தலா 05 மரக்கன்றுகள் என்ற அடிப்படையில் பெறுமதியான மரக் கன்றுகள் நடப்பட்டு அவை பராமரிக்கப்பட்டும் வருகின்றன. அவை வளரும் வரை புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தால் பராமரிக்கப்படும். இந்த செடி நாற்று மேடைகள் மேலும் எதிர்காலத்திலும் இதுபோன்ற நடவடிக்கைகளை ஆரம்பிக்க மேற்கொள்ள வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.*

*அது மட்டுமின்றி, வீட்டுத் தோட்ட உற்பத்தி பற்றி அதிகம் பேசப்படும் இக் காலப்பிரிவில் அரச அதிகாரிகள் நீண்டகாலமாகவே இந்த நடைமுறையில் ஈடுபட்டுள்ளனர்.*

*ஆனால் இன்றைய பொருளாதார நெருக்கடி காரணமாக இந்த தோட்டங்களை செய்யும் வேலைத்திட்டம் முடுக்கி விடப்பட்டுள்ளது.*


திகதி 08.07.2022 வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4810
ரூ. 7,504,440.00
E 0 8 6 6 5 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 17,422,758.40

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3052
ரூ. 3,443,680.00
K 14 22 23 36
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 63,156,147.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 840
ரூ. 1,910,740.00
M 02 29 52 68
வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 117,565,916.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1288
ரூ. 2,401,440.00
வெற்றி இலக்கங்கள்
3 0 0 4 1 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,161,799.20

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 119
ரூ. 4,401,200.00
வெற்றி இலக்கங்கள்
கன்னி 02 09 26 28
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,951,910.60

26+ Mega Power மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1158
ரூ. 2,956,140.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 260,247,410.00
W 11 28 46 57 70
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00
National Lotteries Board



Repeat Your ad For Better Offers



# இலங்கை வங்கி

## ஏலவிலை கூறலுக்கான அழைப்பு (IFB)

**ஏலவிலைகூறலை மூடுவதற்கான திகதியை நீடித்தல்**

**கேள்விப்பத்திர இல : BOC/PROP/P/2021/227**

2022.06.24ஆம் திகதியன்று "தினகரன்" பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை வங்கி கண்டி 2ஆம் நகரக் கிளையின் IIஆம் கட்டத் திருத்த வேலைகள் தொடர்பிலான விளம்பரத்திற்கு மேலதிகமாக,

இவ் விலைகூறலை மூடும் திகதி 2022.08.05 1000 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை கவனத்திற் கொள்ளவும்.

விலைகூறல் ஆவணங்களை, இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயம் சொத்துக்கள் மற்றும் சேகரிப்புப் பகுதியில், 2022.08.04ஆம் திகதி வரை கடமை தினங்களில் 0900 மணி முதல் 1400 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏலவிலை கூறல்கள் 2022.11.04ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.

ஏலவிலை பிணையானது 2022.12.02ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

பிரதான முகாமையாளர்,
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி,
14ஆம் தளம், "இலங்கை வங்கிச் சதுக்கம்"
இல. 01, இலங்கை வங்கி மாவத்தை
கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி இல. : 011-2544310
தொலைநகல் : 011-2449629
மின்னஞ்சல் முகவரி : procurement@boc.lk



# உலர்ந்த விறகு/உலர்ந்த மருந்துகள் வழங்குவதற்காக வழங்குநர்களை பதிவு செய்தல் – 2023

## ஆயுர்வேத திணைக்களம் (மேல் மாகாணம்)

மேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் மேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கீழ் காணப்படும் கீழ்க்காணும் வைத்தியசாலைகளுக்கு 2023.01.01 முதல் 2023.12.31 வரையான காலத்திற்குள் (அத்திகதியும் உட்பட) தேவைப்படும் உலர்ந்த விறகுகள்/உலர்ந்த மருந்துகளை வழங்குதல் சார்பாக வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக இலங்கையரிடம் அல்லது பதிவு செய்த நிறுவனங்களில் இருந்து 2022.07.11 முதல் 2022.08.02 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. உலர்ந்த மருந்துகள் / உலர்ந்த விறகுகள் வழங்குதல் மேற்கொள்ள வேண்டிய நிறுவனம்
மீகொட, மீரிகம, மொல்லிகொட, லுனாவ, நேபொட, கந்துபொட, ஆனியாகந்த, ஜம்புரலிய மற்றும் வீதியகொட, ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் நிட்டம்புவ மத்திய மருந்தகத்திற்காக

02. விண்ணப்பங்கள் கோரல்
2022.07.11 முதல் 2022.08.02 பி.ப.2.00 வரை

03. விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல்
i. www.ayurveda.wp.gov.lk ஆகிய திணைக்கள இணையத்தளத்தின் மூலம்
ii. 2022.07.11 முதல் 2022.08.01 வரை திங்கள் மற்றும் வியாழன் தினங்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை நுகேகொட, நாவல வீதி, இல.18 எனும் முகவரியில் அமைந்துள்ள மேல் மாகாண ஆயுர்வேத திணைக்கள பெறுகைப்பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

04. பதிவுசெய்தற்கட்டணம்
பதிவு செய்தற் கட்டணம் ஒரு வழங்கல் பொருளுக்காக ரூ.500.00 அகும். (உலர்ந்த விறகு மற்றும் உலர்ந்த மருந்துப்பொருட்கள் ஆகிய இரு பொருட்களும் ரூ.1000.00 ஆகும். பதிவு செய்வதற்கான கட்டணம் மீளளிக்கப்படாது அத்துடன் விண்ணப்பத்துடன் குறித்த பற்றுச்சீட்டை இணைத்திருத்தல் கட்டாயமாவதுடன் அவ்வாறு இல்லாமலிருப்பது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாகும்)

05. விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை
i. 2022.08.02 பி.ப.2.00 இற்கு முன் மேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் கணக்குப்பிரிவின் காசாளருக்கு குறித்த பதிவு கட்டணத்தை செலுத்தி அல்லது
ii. "ஆயுர்வேத ஆணையாளர் மேல் மாகாணம்" என இலங்கை வங்கியின் டொரிங்டன் கிளையில் அமைந்துள்ள இல.2323338 இற்கு நிதி வைப்பு செய்தல் வேண்டும்.

மேற்படி கொடுப்பனவு பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை விண்ணப்பத்துடன் "தலைவர், பெறுகைக்குழு, ஆயுர்வேத திணைக்களம் (மே.மா) இல-18, நாவல வீதி, நுகேகொடை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது அம் முகவரியில் அமைந்துள்ள மேல் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் 2022.08.22 பி.ப.2.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு உள்ளிடலாம் அல்லது விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம். (குறித்த தினத்திற்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்)

விண்ணப்பங்களை அனுப்பும் உறையை முத்திரையிட்டு அனுப்ப வேண்டியதுடன், உறையின் இடதுபக்க மேல் மூலையில் "2023 ஆம் ஆண்டிற்காக வழங்குநர்களை பதிவு செய்தல்" என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

06. மேலதிக விபரங்களுக்கு
மேலதிக விபரங்களுக்கு அலுவக நேரங்களில் வருகைதந்து அல்லது தொலைபேசி இல - 0112820792 அல்லது 0112820796 அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

07. விண்ணப்பதாரிகளை பதிவுசெய்தல் அல்லது செய்யாதிருக்கும் உரிமை மாகாண ஆயுர்வேத ஆணையாளர் (மே.மா) இற்கு உரியது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**ஆயுர்வேத திணைக்களம் (மே.மா)**
**இல.18, நாவல வீதி, நுகேகொடை**



OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk



**புத்தசாசனம் மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு**

# பாதுகாப்பு சேவை, துப்புரவேற்பாடு மற்றும் சுத்திகரிப்புச் சேவைக்காக கேள்வி அழைப்பு

1. கொழும்பு 07 ஸ்ரீமத் அநகாரிக்க தர்மபால மாவத்த, இல. 135இல் அமைந்துள்ள புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிற்கு கீழ்க்காணும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் தகைமை கொண்ட தகுதியான கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட கேள்விக்காக அழைப்பு விடுக்கப்படுகிறது.
   i. பாதுகாப்பு சேவை - 2022.09.01 நண்பகல 12.00 முதல் 2023.09.01 நண்பகல் 12.00 வரையான காலத்திற்கு
   ii. துப்புரவேற்பாட்டு மற்றும் சுத்திகரிப்புச் சேவை 2022.09.01 முதல் 2023.08.31 வரையான காலத்திற்கு
2. தேசிய போட்டி விலைமனுக்கள் முறைமையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
3. கேள்வி வழங்களிற்காக கீழ்க்காணும் தகைமையை பூர்த்தி செய்யும் தகவுத் திறன்களுக்கு அமைவாதல் வேண்டும்
   (அ) பாதுகாப்புச் சேவைக்காக கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளும் அடிப்படை தகைமையாக அரச பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
   (ஆ) துப்புரவேற்பாடு மற்றும் சுத்திகரிப்பு சேவைக்காக கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு செல்லுபடியாகும் பதிவு நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
   (இ) கேள்வி ஆவண மதிப்பீட்டின்போது கேள்வி ஆவணங்களுக்குள் அடங்கியுள்ள அடிப்படைத் தகைமைகள் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும்.
   (ஈ) கடந்த 5 ஆண்டிற்குள் குறைந்தபட்சம் ரூ. 05 மில்லியனுக்கு மேற்படி வருடாந்த வருமானத்தை குறித்த சேவையை வழங்குவதின் மூலம் பூர்த்தி செய்திருத்தல்
4. மீளளிக்கப்படாத ரூ. 2000/- கட்டணத்தை காசாகச் செலுத்தி கொழும்பு -07, ஸ்ரீமத் அநகாரிக்க தர்மபால மாவத்தை இல. 135, 'தஹம்பாய' எனுமிடத்தில் அமைந்துள்ள புத்தசாசனம் மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சில் செயலாளருக்கு விடுக்கப்படும் விண்ணப்பத்தின் மூலம் இதற்கு ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2022.07.11 முதல் 2022.08.01 வரை வாரத்தின் வேலை செய்யும் எந்த தினத்திலும் 9.00 மணி முதல 3.00 வரை (வெள்ளி தவிர்ந்த) சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணத் தொகுதியை கொள்வனவு செய்யலாம்.
5. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **பாதுகாப்பு சேவைக்காக கேள்வி கோரல் - 2022** எனவும் குறிப்பிட்டு 2022.08.01 14.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பொறியிடப்பட்ட கேள்விகளை மேற்படி முகவரியிலுள்ள புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கொழும்பு -07 ஸ்ரீமத் அநகாரிக்க தர்மபால மாவத்தை இல. 135இல் 'தஹம்பாய' புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் 3ஆம் மாடியில் கணக்குப் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் அவை திறக்கப்படும். இக் கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.
6. ஆவணங்களுடன் சமமான மாதிரிகளை பயன்படுத்தி மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட ரூ. 25000/- நிபந்தனையற்ற கேள்விப் பிணையொன்றை அல்லது அதற்குச் சமமான தொகைக்கு பெற்றுக் கொண்ட வங்கிப் பிணையொன்றை அல்லது காசாக செலுத்தப்படும் கேள்விப் பிணையுடன் ஒப்படைத்தல் வேண்டும். முடிவடையும் தினம் முதல் 90 கலெண்டர் தினங்கள் முன்னோக்கி அக் கேள்விகள் செல்லுபடியாதல் வேண்டும்.
7. மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து கொழும்பு -07, ஸ்ரீமத் அநகாரிக்க தர்மபால மாவத்த இல. 135இல் 'தஹம்பாய' புத்த சாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் பிரதான நிதி அதிகாரி தொ. பே. இல. 011-2307673 அல்லது 011-2307674/94 நீடிப்பு 308இல் கணக்கு இலக்கத்தை அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

திகதி: 2022.07.11

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக்குழு,**
**புத்த சாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,**
**'தஹம்பாய' ஸ்ரீமத் அநகாரிக்க தர்மபால மாவத்தை,**
**கொழும்பு -07.**



**அரச மரக் கூட்டுத்தாபனம்**
**வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு**

# பெறுகை அறிவித்தல்

**பெறுகை இலக்கம்: STC/PSM/2022/PRO – 02**

## 60,000 எண்ணிக்கையான Nail Plates (Gang Nails) கொள்வனவு செய்வதற்கான விலைமனு அழைப்பு

- **100mm x 225mm - 60,000 Nos.**

மேற்குறிப்பிடப்பட்ட பொருட்களை வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள், முதன்மையானவர்கள், வழங்குநர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பத்தரமுல்ல, இல. 82, ரஜமல்வத்த வீதி, அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

1. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையில் இடம்பெறும்.
2. விலைமனுதாரர்கள் விலைமனுக்களை மேற்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியிலுள்ள (கொள்வனவு மற்றும் கப்பற்றுறை) முகாமையாளரிடமிருந்து கொள்வனவு செய்யலாம்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தவராக இருத்தல் கூடாது.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மேற்குறிப்பிடப்பட்ட முகவரியிலுள்ள (கொள்வனவு மற்றும் கப்பற்றுறை) முகாமையாளரிடமிருந்து **011-2866601-04** எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களை (கொள்வனவு மற்றும் கப்பற்றுறை) முகாமையாளர் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஒரு தொகுதி விலைமனு ஆவணத்திற்கு மீளளிக்கப்படாத 3,500.00 ரூபாவை ரொக்கப் பணமாகச் செலுத்துவதன் பேரில் 2022-08-19ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பத்தரமுல்ல, இல. 82, ரஜமல்வத்த வீதி, அரச மரக் கூட்டுத்தாபனத்தின் (கொள்வனவு மற்றும் கப்பற்றுறை) முகாமையாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்களை 2022-08-22ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பெறுகைக் குழு, அரச மரக் கூட்டுத்தாபனம், இல. 82, ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்ல எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. சகல விலைமனுக்களுடனும் 144,048.00 ரூபா (USD 400) பெறுமதிக்குச் சமமான 118 நாட்களுக்குச் செல்லுபடியாகும் வகையிலான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**அரச மரக் கூட்டுத்தாபனம்.**

# வவுனியாவில் 1990 சேவை முடக்கம்

ஓமந்தை விஷேட நிருபர்



வவுனியாவில் 1990 சேவை முடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.வவுனியாவில் அவசர அம்புலன்ஸ் சேவையான 1990 சேவைக்கு எரிபொருள் இல்லாத நிலையில் வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலகத்துக்கு அருகாமையில் அமைந்திருக்கும் லங்கா ஐ.ஓ.சி எரிபொருள் விற்பனை நிலையத்தில் டீசல் வழங்கப்படவுள்ள நிலையில் சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்தில் டீசல் நிரப்புவதற்காக 1990 அம்புலன்ஸ் வரிசையில் காத்து நிற்கின்றது. வார நாட்களில் இலங்கை போக்குவரத்து சபையால் எரிபொருள் வழங்கப்பட்டாலும் வார இறுதி நாட்களில் எரிபொருள் இல்லாமல் குறித்த சேவைகள் வழங்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

மேலும் கடந்த வாரங்களில் இ. போ. சவினரால் மேற்கொள்ளப்பட்ட பணிபகிஷ்கரிப்பு காரணமாக எரிபொருள் பெறமுடியாத நிலையும் ஏற்பட்டதுடன், ஐ.ஓ.சி எரிபொருள் விற்பனை நிலையத்தில் அவசர சேவைக்கான எரிபொருட்கள் கையிருப்பில் வைத்துக் கொள்ளப்படாத நிலைமையும் உள்ளது.

வவுனியா மாவட்டத்தில் இயங்கும் மூன்று அம்புலன்ஸ் வண்டிகளில் இரண்டு வண்டிக்கு டீசல் இல்லாத அபாய நிலை உருவாகியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 450 கிலோ கடல் அட்டை பறிமுதல்

## இரண்டு பேர் கைது

மன்னார் குறூப் நிருபர்

இலங்கைக்கு கடத்துவதற்காக கொண்டுவரப்பட்ட 450 கிலோ கடல் அட்டை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு இருவரை வனத்துறையினர் கைது செய்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (10) மதியம் இராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளி அருகே இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,..

இராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளி அருகே இருமேனி பகுதியில் இருந்து ஆட்டோவில் கடல் அட்டை இலங்கைக்கு கடத்துவதற்காக கொண்டு செல்லப்படுவதாக வனத்துறைக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற வனத்துறையினர் ஆட்டோவில் கொண்டுவரப்பட்ட அரசால் தடை செய்யப்பட்ட 450 கிலோ கடல் அட்டையை பறிமுதல் செய்தனர்.

இதன் போது சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# தலைமைத்துவப் பயிற்சியும் ஆலோசனை வழிகாட்டல் நிகழ்வும்



இரத்தினபுரி சுழற்சி நிருபர்

வழிகாட்டல் நிகழ்வும் தலைமைத்துவ பயிற்சியும் கடந்த ஞாயிற்றுக்கிழமை பலாங்கொடை பள்ளிவாசல் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

பலாங்கொடை பள்ளிவாசல் பரிபாலன சபை இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்ததுடன் பிரதேச சமூக நல அமைப்புக்கள் மற்றும் சமூக ஆர்வலர்களின் ஒத்துழைப்புகளும் இந் நிகழ்ச்சிக்கு பெறுக்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இளைஞர்களை மையப்படுத்தி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் போதைப்பொருள் பாவனை (Dru gs addiction), தொலைபேசிக்கு அடிமையாதல் (Phone addiction), உளவியல் பிரச்சினைகள் (Psychological issues) தலைமைத்துவ ஆற்றல்களை வளர்த்தல (Leadership issues) தொழிற் பயிற்சிகள் ஆகிய தலைப்புக்களின் கீழ் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

துறைசார் நிபுணர்களின் உதவியுடன் இப்பயிற்சி வேலைத் திட்டம் ஒரு வருடகாலத்திற்கு செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இப்பணிகளுக்கு பூரண உதவியை பலாங்கொடை பள்ளிவாசல் பரிபாலன சபைத்தலைவர் அல்ஹாஜ் ஏ. எஸ். எம் நஜீம் தலைமையிலான அணி வழங்கி வருவதாகவும் இவ்வமைப்புக்களின் சார்பில் எம்.ஏ.எம் நீசர் தெரிவித்தார்.

# பொலிஸ் காவலரண் மீது தாக்குதல்

ஓமந்தை விஷேட நிருபர்



வவுனியா பூந்தோட்டம் பொலிஸ் காவலரண் இனந்தெரியா தவர்களால் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் (9) இரவு இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்ததுடன்,அச்சந்தர்ப்பத்தில் பொலிஸார் எவரும் காவலரணில் கடமையில் ஈடுபட்டிருக்கவில்லை எனவும் தெரிவித்தனர். இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோதமாக... (02 ஆம் பக்கத் தொடர்)

அவர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## இடைக்கால அரசாங்கத்தை... (02 ஆம் பக்கத் தொடர்)

அமைச்சர் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உருவாக்கப்படவுள்ள சர்வ கட்சி அரசாங்கத்தின் மூலம் நாட்டு மக்கள் எதிர் நோக்கும் எரிபொருள், எரிவாயு, அத்தியாவசிய உணவுப்பொருட்கள், உரம் போன்றவற்றுக்கு விரைவான தீர்வு காணப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ள அவர், அதற்கான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டியது அனைத்து தரப்பினதும் பொறுப்பாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## உலக நாடுகள் பலவும் ... (02 ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறு பிரதமரின் இல்லத்திற்கு தீ வைக்கப்பட்டமைக்கு பல்வேறு தரப்பினரும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் தனது டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ள சட்டத்தரணி என்.கே.அஷோக்பரன், ரணில் விக்ரமசிங்க தனக்குப் பின்னர் தனது இல்லத்தை அரச பாடசாலையொன்றுக்கு வழங்கியிருக்கின்றார்.

அதுமாத்திரமன்றி அந்த இல்லத்திற்குள் பெறுமதியான புத்தகங்களுடன் கூடிய நூலகம் இருப்பதை அவரது நேர்காணல் காணொளிகளில் கண்டிருக்கிறோம். அத்தகைய இல்லத்திற்குத் தீவைப்பதென்பது மிகமோசமான குற்றச்செயலாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது டுவிட்டர் பதிவில் , பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீடு தீ வைத்து எரிக்கப்பட்டதை வன்மையாக கண்டிக்கின்றேன்.

ஒரு மோசமான அரசாங்கத்தை விரட்டி, மக்கள் ஆட்சியை நிலைநிறுத்துவதற்கான இலக்கை அடைய போராட்டக்காரர்களுக்கு வன்முறை தேவையில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

## பிரதமரது இல்லத்துக்கு...

அவர்கள் மூவரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகள் சீ.ஐ.டியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தீயணைக்க வந்த தீயணைப்பு வாகனத்திற்கும் இடையூறு செய்யப்பட்டது.

இந்த தீவிபத்தில் முழுவீடும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இவரது சகோதரரின் மகனான சன்னவின் வீட்டிலிருந்த தங்க ஆபரணங்களும் கொள்ளையிடக்கப்பட்டுள்ளன. பிரதமரின் உத்தியோகபூர்வ வாகனமான BMW வாகனமும் முற்றாக எரித்து நாசமாக்கப்பட்டுள்ளது. இதேவேளை அலரிமாளிகையில் இருந்த தீயணைப்பு கருவியை திருடிய ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்கள் கல்கிஸ்ஸ, ஜாஎல, காலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தகவல்கள் வெளியாகின்றன.

## எதிர்கால அரசியல் செயல்பாடுகள்...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் நடைபெறவுள்ளது.

பதில் ஜனாதிபதி ஒருவரை நியமித்தல் மற்றும் சர்வ கட்சி அரசாங்கம் ஒன்றை உருவாக்குவது தொடர்பில் இன்றைய இந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்க்கமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சபாநாயகர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை நேற்றைய தினம் பல்வேறு அரசியல் கட்சிகளின தும் உள்ளக பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

அதற்கிணங்க முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளதுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் சந்திப்பு ஒன்றும் அக்கட்சியின் பொதுச் செயலாளரின் தலைமையில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, மக்கள் விடுதலை முன்னணியின் முக்கிய சந்திப்பு ஒன்று அக்கட்சியின் முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் நேற்று நண்பகல் நடைபெற்றுள்ளதுடன் அக்கட்சி மேற்படி கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தவும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

## ஊடகவியலாளரை தாக்கிய...

சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்திய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக விசேட விசாரணைகளை மேற்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மாஅதிபர் பணிப்புரை விடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதன்போது, சிரச ஊடகவியலாளர்கள் இரு வரும் மற்றும் தெரண ஊடகவிய லா ளர்கள் இருவரும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

## லிட்ரோ GAS விலை ...

தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரண்டு நாட்களுக்குள் கொழும்பில் தெரிவு செய்யப்பட்ட 140 இடங்களில் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்

## யாழ்.நவாலி....

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றது.

அதனை தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் மலர் தூபி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

கடந்த 1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும், நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப்படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் 147 பேர் பலியாகினர்.

அன்று அதிகாலை வலிகாமம் பிரதேசங்களை நோக்கி எறிகணை தாக்குதல் ,விமான தாக்குதல்களின் உதவியுடன் இராணுவத்தினர் முன்னேறிப்பாய்தல் எனும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தொடர் எறிகணை தாக்குதல்கலால் தமது வாழ்விடங்களை விட்டு நவாலியை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் நவாலி சென்ற் பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலயத்திலும் தஞ்சமடைந்தனர்.

அன்றைய தினம் காலை திடீரென வந்த மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை மக்கள் தஞ்சமடைந்திருந்த தேவாலயம் மற்றும் ஆலயம் மீது வீசின.இக் குண்டு வீச்சு சம்பவத்தில் குழந்தைகள் பெண்கள் உட்பட 147 பேர் அந்த இடத்திலேயே உடல் சிதறி பலியாகியிருந்தனர். 350க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.

## தீர்வினை காண்பதற்கு ...

அடிப்படையாக கொண்டு செயற்படக்கூடாது என அமெரிக்க இராஜாங்க திணைக்கள பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தையோ அல்லது புதிதாக அரசமைப்பின் அடிப்படையில் தெரிவு செய்யப்படக்கூடிய அரசாங்கத்தையோ, நீண்டகால பொருளாதார ஸ்திரதன்மையை ஏற்படுத்தக்கூடிய தீர்வுகளை விரைவாக அடையாளம் கண்டு தீர்வுகளை முன்வைக்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பத்திரிகையாளர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து எச்சரித்துள்ள அமெரிக்கா வன்முறைகள் குறித்தும் கண்டனம் வெளியிட்டுள்ளது. இலங்கை மக்களிற்கு அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான குரல் எழுப்புவதற்கான உரிமையுள்ளது. ஆர்ப்பாட்டங்கள் தொடர்பான வன்முறைகளில் ஈடுபட்டவர்களை கைது செய்து விசாரணைகளை உட்படுத்த வேண்டும் எனவும் அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

## துரிதமாக மக்களுக்கு...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேலும், 3,740 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிக் கொண்டு இரண்டாவது கப்பல் இன்று (11) இலங்கைக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3,200 மெற்றிக் தொன் எரிவாயு கொண்ட மூன்றாவது கப்பல் ஜூலை 15 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளது.

## பெரும்பான்மை பலத்தை...

அதுவரை நாட்டின் விவகாரங்களை முன்னெடுத்துச் செல்ல பிரதமராக பணியாற்றுவேன் என்றார்.

இன்று இலங்கையில் எரிபொருள் பிரச்சினையும் உணவுப் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளதாகவும் அதற்காக உலக உணவு அமைப்பின் தலைவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் சர்வதேச நாணய நிதியத்துடன் சில முக்கிய விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

எனவே தற்போதைய அரசாங்கம் இராஜினாமா செய்த பின்னர் உடனடியாக வேறொரு அரசாங்கத்தை நியமிக்க வேண்டும் எனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

முழு நாட்டையும் உள்ளடக்கிய எரிபொருள் விநியோகம் இந்த வாரம் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், உலக உணவுத் திட்டத்தின் பணிப்பாளரும் இந்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிலைத்தன்மை அறிக்கை முன்வைக்கப்பட உள்ளதாகத் தெரிவித்த பிரதமர், இந்த உண்மைகளை கருத்திற்கொண்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## 11 ஊடகவியலாளர்கள் ...

நேற்று முன்தினம் இரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் இல்லத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் ஊடகவியலாளர்கள் பலரையும் தாக்கியுள்ளனர்.

அவர்களில், 'அத தெரண' மற்றும் 'சிரச' செய்தியாளர்களும் ஊடகவியலாளர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த தாக்குதல் சம்பவம் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கவலை தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்கு காரணமான அதிகாரிகளுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மாஅதிபர் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கையுடன் உடன்படிக்கையை...

அதே நேரத்தில் நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கியில் உள்ள, அதிகாரிகளுடன் தொழில்நுட்ப விவாதங்களைத் தொடர திட்டமிட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கம் காரணமாக, குறிப்பாக ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மீது ஏற்பட்டுள்ள பாரிய தாக்கம் குறித்து ஆழ்ந்த கவலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடினமான இந்த நேரத்தில் சர்வதேச நாணய நிதியக் கொள்கைகளுக்கு இணங்க, இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியதாகவும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் .

## 44,000 மெ. தொன் யூரியா ...

உரத்தை இன்றைய தினமே விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு 60,000 மெற்றிக் தொன் யூரியா உரம் கிடைக்கவுள்ள நிலையில் மேலும் 21,000 மெற்றிக் தொன் யூரியா உரம் எதிர்வரும் நான்கு வாரங்களுக்குள் நாட்டுக்கு கிடைக்கும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## பிரதமரின் வீட்டுக்கு...

மாபெரும் தவறாகும். அமைதிவழி நியாயமான போராட்டங்கள், எக்காரணத்தைக் கொண்டும் வன்முறை வழியில் செல்லக்கூடாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

தனியார் உடமைகளுக்கும் பொது உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கும் தீய சக்திகளிலிருந்து மக்கள் போராட்டத்தை பாதுகாக்க வேண்டும் என தெரிவித்தார்.

## நான்கு அமைச்சர்கள் தமது ...

நேற்று அவர்கள் தமது இராஜினாமா தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

அமைச்சர்களான தம்மிக்க பெரேரா, ஹரீன் பெர்னாண்டோ, மகிந்த அமரவீர, மனுஷ நாணயக்கார ஆகியோரே தமது அமைச்சர் பதவிகளை இராஜினாமா செய்வதாக தெரிவித்துள்ளனர்.

அதற்கிணங்க முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக பெரேரா நேற்று தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார். அமைச்சர் தம்மிக பெரேரா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டதுடன் கடந்த ஜூன் 24ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டிருந்தார்.

அதேவேளை இந்தியாவிலிருந்து கிடைக்கப்பெறும் யூரியா உரத்தை உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்ற பின்னர் தாம் தமது பதவியை இராஜினாமா செய்யப் போவதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியிலிருந்து அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரும் தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்வதாக தெரிவித்துள்ளனர்.

## ஊடவியலாளர்கள் மீதான ...

தெ ரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,..

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்திற்கு முன்பாக அரச வன்முறையைப் பயன்படுத்தி சிரச ஊடகவியலாளர்கள் நால்வரை இலக்காக்க கொண்டு அவர்கள் மீது பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் நடத்திய கொடூரமான மனிதாபிமானமற்ற தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அது மட்டுமன்றி, தாக்கப்பட்டவர்களை மருத்துவமனையில் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களைக் கூட விரட்டி விரட்டித் தாக்கும் அளவுக்கு பாதுகாப்புப் படையினர் மனிதாபிமானமற்றவர்களாக மாறிவிட்டனர்.

மக்களுக்கு தகவல் அறியும் உரிமையை உறுதி செய்வதற்கு நாகரிகமான ஊடகப் பயன்பாட்டில் ஈடுபட்ட மற்றும் அது தொடர்பாக மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஊடகவியலாளர்கள் குழுவொன்று குறிவைக்கப்பட்டு தாக்கப்பட்டமை கோழைத்தனமானது.

மக்கள் இறையாண்மை மக்களிடமே உள்ளது என்பதை முன்னெப்போதையும் விட அதிகமாக நிரூபிக்கப்படும் இச்சூழ் நிலையிலும் கூட இவ்வளவு கொடூரமாக நடந்துகொள்ள பாதுகாப்புப் படையினருக்கு பணிப்புரை வழங்கியது யார் என்பதும், சிரச ஊடகவியலாளர்களையே குறிவைத்து தாக்கு தலை நடத்தும் தேவை யாருக்குள்ளது என்ற விடயத்தில் பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.

உடனடியாக பாரபட்சமற்ற விசாரணையை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும்.

## ஜனாதிபதி கோட்டாபய....

தீர்மானத்தை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதையடுத்து ஜனாதிபதி தனது தீர்மானத்தை சபாநாயகரிடம் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன:

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தமது ராஜினாமாவை அறிவித்துள்ள நிலையில் தொடர்ந்தும் நாட்டில் அமைதியின்மை ஏற்படுத்த வேண்டிய அவசியம் கிடையாது என்றும் அமைதியை ஆட்சியைப் பொறுப்பேற்கும் வகையில் நாட்டில் அமைதி நிலையை தக்க வைப்பதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் நாட்டின் எதிர்காலத்திற்காகவும் அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் அனைவரிடமும் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்திற்கு தீவைக்கப்பட்டதன் மூலம் சில தரப்பினர் வன்முறையை தூண்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள சபாநாயகர், இனியும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடாமல் அமைதியான வகையில் செயல்படுமாறும் அனைவரிடமும் கேட்டுக் கொண்டுள்ளார்.

முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை சாத்தியமாக நிறைவு செய்யும் வரை நாட்டின் அன்றாட நடவடிக்கைகளை இயல்பாக முன்னெடுத்துச் செல்லுமாறு அனைத்து அரச ஊழியர்கள் மற்றும் மக்களையும் கேட்டுக் கொள்வதாகவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

## ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக... (02 ஆம் பக்கத் தொடர்)

முன்னதாக, கோட்டா கோ கிராமம் உள்ளிட்ட பிரதேசங்கள் தாக்கப்பட்டு, நாடு முழுவதும் பரவிய அமைதியின்மை நிலைமையின் போது சில சந்தர்ப்பங்களில் பல திருட்டு மற்றும் கொள்ளை சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அந்த சம்பவங்களுக்கு காரணமானவர்களைக் கண்டு பிடிக்க புகைப்படம் மற்றும் காணொளி ஆதாரங்களை பதிவிட்ட காவல்துறை, பல கோடி ரூபா பணத்தை காவல்துறையிடம் ஒப்படைப்பது குறித்து ஏன் இதுவரை எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை என கேள்வி எழுப்பியுள்ளனர்.

# வம்மியடிப்பிள்ளையார் ஆலய மகோற்சவம்



அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தின் ஆனிப்பௌர்ணமி மகோற்சவத்தை முன்னிட்டதான கொடியேற்றம் அண்மையில் இடம்பெற்றது.

சிவபூமி என அழைக்கப்படும் ஈழமணித்திருநாட்டின் தென்கிழக்கில் வரலாற்றுச் சிறப்புடன் இயற்கை எழில் நிறைந்த அக்கரைப்பற்று பதிதனில் கோயில் கொண்டு அருள்பாலிக்கும் ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தில் கடந்த இரு வருடம் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மகோற்சவம் இடம்பெறாத நிலையில் இவ்வருடம் மகோற்சவம் இடம்பெறுகின்றது.



அக்கரைப்பற்று ஸ்ரீ வீரம்மாகாளியம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜையினை தொடர்ந்து அங்கிருந்து கொடிச்;சீலை எடுத்துவரும் நிகழ்வு இடம்பெற்றது. மங்கள வாத்தியங்கள் முழங்க பக்தர்கள் சகிதம் கொடிச் சீலை ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டது.

பின்னர் அங்கு யாக பூஜைகள் நடைபெற்றதுடன தொடர்ந்து ஆலயத்தில் மூலமூர்த்திக்கான பூஜை இடம் பெற்றதுடன் வசந்த மண்டபத்தில் வீற்றிருக்கும் விநாயகப்பெருமானுக்கு விசேட அலங்கார பூஜை நடைபெற்றதன் பின்னர் எழுந்தருளிய விநாயகப்பெருமான் அடியார்களினால் வீதி வலமாக அழைத்துச் செல்லப்பட்டு கொடிக்கம்பத்தின் அருகே அமர்த்தப்பட்டார்.

கொடிக்தம்பம் அருகே இடம்பெற்ற பூஜைகளின்; பின்பு நாதஸ்வர மேள ஒலி முழங்க அடியார்களின் பிரார்த்தனையுடன் கொடியேற்றம் நடைபெற்றது. இதேநேரம் ஆலய நிருவாக சபை திருப்பணிச்சபை மகளிர் அணி ஆகியோர் இணைந்து அன்னதானம் வழங்கும் பணியை முன்னெடுத்ததுடன் இப்பணியை ஆலையடிவேம்பு பிரதேச சமூக நலன் அமைப்பு முன்னின்று செயற்படுத்தினர்.

கடந்த 02ஆம் திகதி வாஸ்து சாந்தியுடன் கிரியைகள் ஆரம்பமாகின. கடந்த 03ஆம் திகதி பிராயசித்த கும்பாபிசேகமும் 04ஆம் திகதி கொடியேற்றமும் இடம்பெற்றது. இன்று 11ஆம் திகதிவரை திருவிழாக்கள் இடம்பெறும். நாளை 12ஆம் திகதி பாற்குடபவனியும் 13ஆம் திகதி தீர்த்தோற்சவமும் கொடியிறக்கமும் 14 ஆம் திகதி திருப்பொன்னூஞ்சலும் பூங்காவனத்திருவிழாவும் 15ஆம் திகதி வைரவர் பூசையும் இடம்பெறும்.

ஆலயத் தலைவர் வி.சுகிர்தகுமார் தலைமையில் மகோற்சவத்தின் வழிபாட்டுக்கிரியைகள் யாவும் இடம்பெற்று வருகின்றன. அக்கரைப்பற்று பகுதி ஆதினகுரு இலி பழனிவேல் குருக்கள் ஆசியுடன் கிரியாகிரம ஜோதி அலங்கார பூசனம் சிவாகமபானு அகோர சிவாச்சாரியார் சிவஸ்ரீ P சு.சுதர்சன் குருக்கள் மற்றும் சாதக இளஞ்சுடர் சிவஸ்ரீ சுதன் சர்மா ஆலய குரு ப.கு.கேதீஸ்வரக்குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் தொடர்ந்து கிரியைகளை நடாத்தி வருகின்றனர்.

## சைவ மஞ்சரி

## மானுடவியல்
(தொடர்)

### காரைக்கால் அம்மையார்



பரமதத்தன் இப்படியே இங்கே இருக்க, புனிதவதியார் காரைக்காலிலே கற்பினோடு இல்லறத்தை வழுவாது நடத்திக் கொண்டு வந்தார். தன் கணவன் மீண்டும் வருவார் என காத்திருந்த புனிதவதியாருக்கு உறவினர்கள் அதிச்சி தகவல் அழித்தனர் இதை பகுதி இரண்டில் காணலாம்...

**குறிப்பு:** மாங்கனித் திருவிழா:

மாங்கனித் திருவிழா காரைக்கால் அம்மையார் இறைவனிடமிருந்து பெற்ற மாங்கனி நிகழ்வை நினைவு கூறுமுகமாகத்தான், காரைக்கால் கோயிலில் மாங்கனி திருவிழா இன்றளவும் ஆனி மாதத்தில் கொண்டாடப்படுகிறது.

79



புனிதவதியாரின் கணவன் ஆகிய பரமதத்தன் புனிதவதியார் தெய்வ பிறவி என்பதை உணர்ந்து அவர்களை விட்டு பிரித்து மற்றோறு பெண்ணை திருமணம் செய்து கொண்டான். அவனுக்கு அம்மனைவிக்கும் பெண்குழந்தை பிறந்தது. அவன் வாழ்தற்கு அஞ்சி நீங்கிய மனைவியாரைத் தான் வணங்கும் தெய்வமாகக்கொண்டு, அவருடைய புனிதவதியார் என்னும் பெயரையே அந்தப் பெண்ணிற்கு இட்டான்.

பரமதத்தன் இப்படியே இங்கே இருக்க, புனிதவதியார் காரைக்காலிலே கற்பினோடு இல்லறத்தை வழுவாது நடத்திக் கொண்டு வந்தார். தன் கணவன் மீண்டும் வருவார் என காத்திருந்த புனிதவதியாருக்கு. சுற்றத்தார்கள், வாணிகத்தின் பொருட்டுச் சென்ற பரமதத்தன் பாண்டிநாட்டிலே ஓர் நகரத்திலே செல்வத்தை விருத்திசெய்துகொண்டு வாசகஞ்செய்கின்றான் என்று கேள்வியுற்று, பரமதத்தனிடம் சிலரை அனுப்பி, அவனுடைய நிலையை உணர்ந்து, புனிதவதியாரிடம் நடந்தது சுற்றத்தார் கூறினார்கள். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்





வரலாற்றுச் சிறப்புமிக்க சிலாபம், மானாவாரியில் அமைந்துள்ள ஸ்ரீஇராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில், கொடியேற்றத்துடன் திருவிழா திங்கட்கிழமை (4) இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படங்களாகும். (படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

# திருக்கோவிலில் திருக்கொடியேற்றம்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ திருக்கொடியேற்ற நிகழ்வு இன்று 11 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த உற்சவம் 17 நாட்கள் நடைபெற்று ஜுலை மாதம் இருபத்தி எட்டாம் (28)தேதி வியாழக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது என்று ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மக்களால் சிறிய கோயிலாக அமைக்கப்பட்டு பின்பு இராஜராஜ சோழர் காலத்தில் கற்கோயில் அமைக்க பெற்று நான்கு ஜாம பூஜைகள் செய்யப்பட்டு ஆடி அமாவாசை உற்சவமும் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில் ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் தலைமையில் உற்சவம் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் ஆடிவேல் உற்சவம் கொரோனா தீநுண்மியின் தாக்கம் காரணமாக நடைபெறவில்லை. இம்முறை இதனை வெகு சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக ஆலய தலைவர் சுரேஷ் மேலும் தெரிவித்தார். பிதிர்க்கடன் செலுத்துகின்ற ஆடி அமாவாசை உற்சவம் என்பதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதற்காக முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





விசேடமாக ஆலயம் சார்பில் அன்னதான குழு ஒன்றும் புதிதாக உருவாக்கப்பட்டு இருப்பதாகவும் அந்தக் குழுவிற்கு பலர் நியமிக்கப்பட்டு இருக்கின்றார்கள் இந்த குழுவினரே ஆலயத்தில் நடைபெறுகின்ற அனைத்து அன்னதான நிகழ்வையும் மேற்கொள்வார்கள் அதேவேளை அதற்கு உதவ விரும்புகின்ற பொதுமக்கள் ஆலய நிர்வாகத்தை தொடர்பு கொள்ளலாம் என்று ஆலய தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தெரிவித்தார் .

தீர்த்தம் அன்று பிதிர்க்கடன் செலுத்துகின்ற வர்களுக்கு வசதியாக பத்து சிவாச்சாரியார்கள் உள்ளடக்கி பிதிர்க்கடன் நிறைவேற்றுகின்ற வேலை முன்னெடுக்கப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

**(காரைதீவு குறூப் நிருபர் சகா)**

## நாதப் பிரம்ம யோகம் - 27



விலங்கியலாளர் Dr. Vastive Andre விலங்குகளில், மீன்களில், பறவைகளில் இசை எப்படியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது பற்றித் தெளிவாக ஆராய்ந்துள்ளார். இந்த முடிவுகளின் படி இசை ஒவ்வொரு உயிரினத்தினதும் மூளை, உளவியல் என்பவற்றில் பல்வேறு விதமான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. மெல்லிசை விலங்குகளினதும் பறவைகளினதும் மூளையில் ஒருவித இனிமையான உணர்வினை உருவாக்கி உடலில் ஆற்றலைத் தூண்டுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இதேபோல் இயற்கையான அதிர்விற்கு அப்பாற்பட்ட அதிர்வுகளைப் பாவிக்கும் போது அவை உடல் ஆரோக்கியத்தில் பாதிப்பினை ஏற்படுத்துவது அறியப்பட்டுள்ளது. ஊது குழல் மூலம் உருவாக்கப்படும் ஒலியின் மூலம் பல்வேறு வகையான பற்றீரியாக்கள் கொல்லப்படுவது அறியப்பட்டுள்ளது. ஜேர்மானிய அறிவியலாளர்கள் ஒரு சில பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் உரிய தகுந்த இசை எது என்பதைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்கள். இசையைப் பாவித்து விலங்குகளின் உணர்வுகளைக் தற்காலிகமாக கட்டுப்படுத்தலாம் என்று கண்டுபிடித்துள்ளார்கள். இதன் மூலம் பயங்கரமான விலங்குகளைமுகாமைத்துவம் செய்ய முடியும் என்று நம்புகிறார்கள். இசை என்பது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்குரிய மிக உகந்த வழியாகும். வார்த்தைகள் இல்லாமல் குறித்த தாளக்கட்டினை ஏற்படுத்துவதன் மூலம் உணர்ச்சிகளை மனதில் ஏற்படுத்த முடியும். வார்த்தைகளோ,மொழியோ இல்லாமல் இசையின் மூலம் உணர்ச்சிகளைத் தூண்டமுடியும். இசை உணர்ச்சிகளைத் துண்டுகிறது. இது நன்கு அனைவராலும் உணரப்பட்ட, அறியப்பட்ட ஒன்று. மெல்லிசை ஏதாவது துன்பத்தில் ஆழ்ந்திருக்கும் ஒருவருக்கு மன உடல் சோர்வினை நீக்கும் வல்லமைஉடையது. மகா கவி ஹோமர் 'மனச் சோர்விற்குரிய மருந்து வெளிப்படையாக அழுவதிலோ, உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதிலோ அல்லது மெல்லிசையிலோ இருக்கிறது' என்கிறார்.

புராதன இந்திய இசை நூலான சங்கீத பாரிஜாதம் இப்படிக் கூறுகிறது, ஒருவன் இறைநாமத்தை ஒரு தாளத்துடனும், சுரத்துடனும் படும் போது அது ஸாமகானம் எனப் படுகிறது.

கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் இசையின் மிக உயர்ந்த விளைவுகள் பற்றிக் கண்டுபிடித்துள்ளார். அவரது கருத்துப்படி 'இசையின் தோற்றுவாய் மனிதனின் சாதாரண மனதிற்கு அப்பால் இருந்து அதி மனிததளத்திலிருந்து வருகிறது. அதனால் மனிதனுடைய உணர்வினை எல்லாத் துன்பங்களிலிருமிருந்து, வழமையாக உலகியல் செய்கைகளிலிருந்து விடுபடச் செய்யும் ஆற்றல் இசைக்கு உண்டு. கேட்பவர், பாடுபவர் இருவரது உணர்வினையும் அழகியல் தளத்திற்கு உயர்த்தி இந்தப் பிரபஞ்சத்தின் தோற்றம் மற்றும் இருப்பின் வரை மனித உணர்வைக் கொண்டு செல்லும் ஆற்றல் இசைக்கு உண்டு.

**(தொடரும்)**

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்

## அறநெறி அறிவுநொடி



### கே. ஈஸ்வரலிங்கம்
### தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

(19165) வளர்பிறையிலேயே மிகச் சிறப்பு வாய்ந்தது எது?

**மூன்றாம் பிறை**

(19166) மூன்றாம் பிறையை வேறு எவ்வாறு சொல்வார்கள்?

**தெய்வீகமான பிறை**

(19167) மூன்றாம் பிறையை நாயன்மார்கள் என்னவென்று பாடுகிறார்கள்?

**பித்தாய் பிறை சூடிய பெருமானே என்று நாயன்மார்கள் பாடுகிறார்கள்.**

(19168) சிவன் தன் முடி மீது அணிந்திருப்பது எந்த பிறையை?

**மூன்றாம் பிறையை**

(19169) இந்த மூன்றாம் பிறைக்கு என்ன விசேஷம் ?

**அமாவாசை முடிந்து வெளிப்படக்கூடிய பிறைதான் மூன்றாம் பிறை.**

(19170) அமாவாசை அன்றும், அதற்கு மறுநாளும் சந்திரன் தெரியுமா?

**தெரியாது.**

(19171) அதற்கு மறுநாள் எது மிளிரும்? **சந்திரன்**

(19172) சந்திரன் எப்படி வரும்?

**ஒரு கோடு போல ஒளிக்கீற்றாக வரும்.**

(19173) அந்தப் பிறையை கண்டு வணங்குவதால் என்ன நன்மை?

**ஆயுளை விருத்தியாக்கும், செல்வங்களைச் சேர்க்கும், பிரம மஹத்தி போன்ற தோஷங்களை நீக்கும்.**




(19174) திங்கட்கிழமையுடன் மூன்றாம் பிறை வரும்போது என்னவென்று சொல்வார்கள்?

**சோமவாரம் என்பார்கள் திங்கட் கிழமையை.**

(19174) அந்த சோமவாரத்தில் வரும் மூன்றாம் பிறையை பார்த்து விட்டால், என்ன நன்மை?

**வருடம் முழுக்க நீங்கள் சந்திரனை வணங்கிய பலன்கள் எல்லாம் கிடைக்கும்.**

(19175) மூன்றாம் பிறையைப் பார்த்தால் வேறு என்ன நடக்கும்?

**மனக்கஷ்டங்கள், வருத்தங்கள் எல்லாமே நீங்கும்.**




மட்டக்களப்பு வாழைச்சேனை பேத்தாழை ஸ்ரீ வீரையடி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது. இலங்கை முதலுதவிச்சங்க இந்து சமயத் தொண்டர் சபையின் தலைமைச் செயலகத்தின் ஒழுங்கமைப்பில் சங்கத்தின் கிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளர் சிவ பாஸ்கரனால் இவை வழங்கப்பட்டன. பேத்தாழை ஸ்ரீ வீரையடி விநாயகர் ஆலய பிரதம குரு சண்முகம் ஐயா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அறநெறிப் பாடசாலை அதிபர் கார்த்திகேயன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.



முந்தல் ஸ்ரீதிரௌபதி அம்மன் ஆலய மஹோற்சவத்தில் வியாழக்கிழமை இரவு (7)அம்பாளுக்கு திருக்கல்யாண நிகழ்வு இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படமாகும்.
(படம்: உடப்பு குறூப் நிருபர்)

தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் ஆனி மாதம் 27ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 துல்ஹிஜ்ஜஹ் பிறை 11

## குறள் தரும் சிந்தனை



வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்

எண்ணங்களால் சிறந்து, பெருமை மிக்கவர்களின் செயல் உறுதி. அரசு வரை செல்வதால் மற்றவர்களாலும் மதிக்கப்படும்.

# ஜனநாயக பாரம்பரியங்களிலிருந்து பிறழாத அரசியல் மாற்றமே தேவை

நாட்டில் பொருளாதார நெருக்கடி மிக மோசமடைந்ததன் காரணமாக அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு கோரி மக்கள் நேற்றுமுன்தினம் முன்னெடுத்த பாரிய எதிர்ப்புப் போராட்டம் நேற்று ஓரளவு தணிவு நிலைமைக்கு வந்துள்ளது. பல்லாயிரக்கணக்கில் மக்கள் ஒன்றுதிரண்ட எதிர்ப்புப் போராட்டத்தினால் கொழும்பு காலிமுகத்திடல் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்கள் பெரும் களேபரமாக மாறியிருந்தன. கொழும்பில் முன்னர் ஒருபோதுமே கண்டிருக்காத மக்கள் வெள்ளம் காரணமாக நாடெங்கும் பரபரப்பும் பதற்றமும் நிலவின.

கொழும்பு நகரில் மாத்திரமன்றி, நாட்டின் பெருமளவு நகரங்களில் நேற்றுமுன்தினம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கத்தின் தவறான அணுகுமுறைகளே காரணமென்பதால், அரசாங்கம் உடனடியாகப் பதவி விலக வேண்டுமென்பதே ஆர்ப்பாட்டம் நடத்திய மக்களின் பிரதான கோரிக்கையாக அமைந்திருந்தது. பதாதைகள் தாங்கிய ஊர்வலங்கள், எழுச்சி கோஷங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்றெல்லாம் நாட்டின் முக்கிய நகரங்கள் நேற்றுமுன்தினம் பதற்றமான நிலைமையிலேயே காணப்பட்டன.

அரசாங்கம் பதவி விலகும்வரை தாங்கள் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லையென பேரணியில் பங்கேற்ற மக்கள் அறிவித்ததால் நாட்டின் அரசியலில் பெரும் கொந்தளிப்பே நிலவிக் கொண்டிருந்தது. நாட்டின் அரசியலில் அடுத்த கணம் நடக்கப் போவது என்னவென்பதையே புரிந்து கொள்ள முடியாதபடி குழப்ப நிலைமையே காணப்பட்டது. இலங்கை மக்கள் மாத்திரமன்றி, இலங்கையின் கொந்தளிப்பு நிலைமையை சர்வதேசமே உற்று நோக்கிக் கொண்டிருந்தது.

இலங்கையின் வரலாற்றில் இதுபோன்ற எதிர்ப்புப் போராட்டங்கள் இதுவரை நடந்ததில்லை. கொழும்பின் முக்கிய கேந்திர நிலையத்தில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை போன்ற கட்டடங்களுக்குள்ளும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரவேசித்ததனால் நாட்டின் பதற்ற நிலைமை உச்சகட்டத்துக்கே சென்றிருந்தது எனலாம். அதேசமயம் நேற்றுமுன்தினமிரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லம் தீவைக்கப்பட்டதனால் பதற்றம் மேலும் அதிகரித்திருந்தது.

அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு கோரி ஆர்ப்பாட்டங்கள் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கையில், மறுபுறத்தில் மக்கள் மத்தியில் ஒருவித கவலையும் குடிகொண்டது. நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பு சீர்குலைந்து விடுமானால், ஒட்டுமொத்த நாடே நிர்க்கதிக்கு உள்ளாகி விடுமோ என்பதுதான் மக்களின் அக்கவலை. ஆர்ப்பாட்டத்துக்கு மத்தியில் ஆங்காங்கே வன்முறைச் சம்பவங்களும் நிகழ்ந்ததன் காரணமாக மக்கள் பலர் அச்சமும் கவலையும் கொண்டனர். மக்களின் போராட்டத்தின் பின்னணியில் எத்தகைய காரணங்கள் இருப்பினும் நாட்டில் சட்டம், ஒழுங்கு, நிர்வாக செயற்பாடுகள் தங்குதடையின்றி சீராக இயங்க வேண்டுமென்பதே பலரதும் வேண்டுதலாக இருந்தது.

நேற்றுமுன்தினம் தீவிரமடைந்திருந்த இவ்வாறான பதற்றமான நிலைமை தற்போது பெருமளவு தணிவுக்கு வந்திருக்கிறது. போராட்டங்கள் ஓரளவு தணிந்துள்ளன. பதற்றமும் பரபரப்பும் குறைந்திருக்கின்றன. நாடு ஓரளவு வழமை நிலைமைக்குத் திரும்புமென்ற நம்பிக்கை தென்படுகின்றது. அனைத்துக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து முடிவெடுக்கும் பட்சத்தில் பதவியிலிருந்து விலகிக் கொள்வதற்குத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்றுமுன்தினம் அறிவித்ததையடுத்து நேற்றுமுன்தினம் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் தணிவு நிலைமைக்கு வந்துள்ளன.

மக்களின் கோரிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதை சபாநாயகரின் அறிவிப்பானது புலப்படுத்துகின்றது. அதாவது அறுதிப் பெரும்பான்மையான மக்கள் முடிவொன்றுக்கு வந்துள்ளார்களெனில் அம்முடிவுக்கு மாறாக செயற்படுவதற்கு ஜனாதிபதி தயாரில்லையென்பதையே சபாநாயகரின் அறிவிப்பு எடுத்துக் காட்டுகின்றது. நேற்றுமுன்தினம் வெளிவந்த தகவல்களையெல்லாம் வைத்துப் பார்க்கின்ற போது எதிர்வரும் 13 ஆம் திகதியன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவியிலிருந்து விலகுவார் என்றே ஊகிக்க முடிகின்றது.

ஆனால் அதன் பின்னரும் நாட்டின் அரசியல்களம் தொடர்ந்தும் பரபரப்பாகவே இருக்கப் போகின்றது. அரசாங்கம் மாத்திரம் பதவி விலகுவதனால் பயனில்லை; பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற ஒட்டுமொத்த உறுப்பினர்களும் பதவி விலக வேண்டுமென்பதே எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்ற மக்களின் கோரிக்கையாக இருக்கின்றது. அவ்வாறானால் நாட்டில் மீண்டும் இரு தேர்தல்கள் நடத்தப்படுவதற்கான சந்தர்ப்பம் உள்ளதை மறுக்க முடியாது. தேர்தல்கள் நடத்தப்படும் வரை அனைத்துக் கட்சிகள் பங்கேற்கின்ற இடைக்கால அரசாங்கமொன்று அமைக்கப்படவும் வேண்டும்.

இவையெல்லாம் எமது நாட்டின் அரசியலமைப்பின் விதிகளை மீறாத வகையிலேயே இடம்பெறவும் வேண்டும். பிரித்தானிய ஏகாதிபத்தியத்திலிருந்து சுதந்திரம் பெற்றுக் கொண்ட பின்னர், இலங்கை நீண்ட காலமாக ஜனநாயக பாரம்பரியத்தைப் பின்பற்றி வருகின்ற நாடென்பதை மறந்து விட முடியாது. அரசியல் நிலைமைகள் மாற்றமடையலாம், ஆனால் மக்களின் தீர்ப்புக்கு மதிப்பளிக்கின்ற ஜனநாயக பாரம்பரியத்திலிருந்து நாடு ஒருபோதுமே வழுவி விடலாகாது என்பதே மக்களின் வேண்டுதலாகும்.

editor.tkn@lakehouse.lk

## சுகாதார அமைச்சின் கணினி உபகரணங்கள் கொள்வனவு

# 421 மில்லியன் ரூபாவுக்கு நடந்த கதி என்ன?

சுகாதார அமைச்சில் கணினி தொழில்நுட்பக் கொள்வனவின் போது 421மில்லியன் ரூபாவுக்கு நடந்தது என்னவென்று தற்போது வரையில் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பதிலளிப்பதற்கு மறுத்து வருகின்றனர். இந்த நிலைமையானது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துகிறது. பொது மக்களின் வரிப்பணத்தில் மேற்கொள்ளப்படுகின்றன அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்கு அதனுடன் தொடர்புடைய அதிகாரிகள் சகலரும் பொறுப்புக் கூறுவதற்கு கடமைப்பட்டவர்களாவர். இதனை ஏற்றுக் கொள்ளும் 'கோப்' எனப்படும் பொது முயற்சியாண்மைக்கான குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சரித்த ஹேரத் வெளிப்படைத்தன்மையுடன் அரசாங்கத்தின் நிதிக் கையாளுகை அமைய வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றார்.

இவ்வாறான நிலையில் கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற கோப்குழுவின் (சுகாதார அமைச்சின் கொள்வனவுகள் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில்) விசாரணைகள் இடம்பெற்ற பொழுது சுகாதார அமைச்சின் கணினிக் கொள்வனவு தொடர்பிலான கொடுக்கல், வாங்கல்கள் விவகாரம் வெளிப்பட்டது. அதன்



போது வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைவாக குறித்த கணினிக் கொள்வனவு குறித்த முன்னுக்குப் பின்னரான தகவல்கள் காரணமாக பெரும் சந்தேகம் ஏற்பட்டது.

இந்நிலையில், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பிரசன்ன குணசேன இக்கொள்வனவு தொடர்பில் குறிப்பிடுகையில் 'குறித்த கணனித் தொழில்நுட்பத்தை பெற்றுக் கொள்வதற்காக 644 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக மாதாந்த சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக மாதம் ஒன்றுக்கு 5 மில்லியன் ரூபா வீதம் வருடத்திற்கு 60 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் அத்தொழில்நுட்பம் எங்களுக்கு தேவையான விதத்தில் இல்லை' என்று குறிப்பிட்டார்.


'பல்வேறு சந்தர்ப்பங்களில் நாங்கள் உள்வாங்கியிருக்கின்ற கணினி தொழில்நுட்பத்தைக் கொண்டு பணிகளைச் செய்ய முடியாத ஒரு நிலைமை இருக்கின்றது. அதாவது இந்த நடைமுறையில் சில விடயங்களை மாத்திரமே உட்செலுத்தி தரவுகளை பெற்றுக் கொள்ள முடியும். எமக்குத் தேவையான தரவுகளை பெற்றுக் கொள்ள முடியாது. அதில் இருக்கின்ற நடைமுறையை எங்களுக்கு முழுமையாகப் பாவிக்க முடியாது. குறித்த திட்டத்தினை ஈ.விஸ் எனும் தனியார் நிறுவனமே செயற்படுத்துகிறது' என்றும் அவர்குறிப்பிட்டுள்ளார்.

அவரது இந்தக் கூற்றுக்கள் மிகப்பெருந்தொகையான செலவீனத்தில் கணினித் தொழில்நுட்பம் உட்புகுத்தப்பட்டு அதற்கான சேவைச் செலவுகளையும் மாதாந்தம் செய்கின்ற போதும் அதனால் எவ்விதமான நன்மைகளையும் அடைய முடியவில்லை என்பதை அப்பட்டமாக்கியுள்ளது.

மேலும் இவ்வாறு பாரியளவில் செலவீனத்தினை மேற்கொண்டதன் பின்னர் அதனை மாற்றியமைப்பதற்கு மேலும் நிதி தேவைப்பட்டதாகவும் குறிப்பிடும் அவர், அதற்கான மாற்றுவழிகளை பின்பற்ற முயற்சித்ததாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

'2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த திட்டமானது 2015 ஆம் ஆண்டில் தான் நடைமுறைக்கு வந்தது. அந்நிலையில் எமது பயன்பாட்டுக்கு ஏற்ப கணனி கட்டமைப்பை மாற்றியமைப்பதாக இருந்தால் மேலும் 7000 மில்லியன் ரூபா தேவையாக உள்ளது. ஆகவே தான் மாற்றுவழியாக எங்களுடைய கண்காணிப்பு பிரிவின் மூலமாக அனைத்து தரவுகளையும் பெற்றுக் கொள்கின்ற வகையில் ஒரு திட்டத்தை ஏற்படுத்த முயற்சி செய்தோம்' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் கோப் குழுவின் தலைவர் சரித்த ஹேரத், இந்தக் கொடுக்




## பகிரங்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தல்

கல் வாங்கல் தொடர்பாக வெளிப்படைத்தன்மை இல்லை என்பது கணக்காய்வின் மூலமும் தெரியவந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளதோடு, நாட்டு மக்களின் நன்மை கருதி இந்த விடயம் தொடர்பாக சரியான தகவல்களை பெற்றுக் கொண்டால் மாத்திரமே தீர்வை வழங்க முடியும் என்று தெரிவித்தார்.

'தரவுகளை முறையாக பெற்றுக் கொள்ள முடியாமையின் காரணமாகவே கொள்முதல் தொடர்பான தரவுகளை உறுதி செய்ய முடியாத நிலைமைகள் ஏற்பட்டுள்ளதாக கூறியதோடு, அந்த விடயங்களை சரியாக பெற்றுக் கொள்ள முடியாவிட்டால் 644 மில்லியன் ரூபாவையும் வருடத்திற்கு 60 மில்லியன் ரூபாவையும் செலவு செய்வதில் எந்த பயனும் இல்லை' என்றும் அவர் கூறினார்.

இந்நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, அதிகாரிகளின் கருத்துகளை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர்கள் கடந்த ஏழு



ஆண்டுகளாக தகவல்களை ஒழுங்கபடுத்தாது தவறுகளை இழைத்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

'500 மில்லியன் ரூபா செலவு செய்து ஒரு கணினி தொழில்நுட்ப வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியமை தொடர்பாக கணக்காய்வாளர் நாயகமும் தகவல்களை கூறினார். அந்த திட்டம் 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2015 ஆண்டு நடைமுறைக்கு வந்துள்ளது. அந்தத் திட்டத்தை நடைமுறைபடுத்துகின்ற அல்லது செயற்படுத்துகின்ற ஒப்பந்ததாரர் நடைமுறைச்சாத்தியமான சேவையை வழங்காமை பாரிய ஒரு குற்றமாகும்' என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

இந்நிலையில் ஈ.விஸ் தனியார் நிறுவனத்தின் தலைவர் சஞ்சீவ விக்கிரமநாயக்க "கடந்த 03ஆம் திகதி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது 'சுகாதார அமைச்சிற்கு எங்களால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட தொழில்நுட்பமானது 500 மில்லியன் ரூபா பெறுமதி வாய்ந்தது என்று ஒரு தரப்பினர் கூறுகின்றனர். இன்னுமொரு தரப்பினர் அதனுடைய பெறுமதி 644 மில்லியன் என்று கூறுகின்றனர். எங்களுக்கு 2008ஆம் ஆண்டு



டிசம்பர் மாதம் இந்தத் திட்டத்திற்காக கிடைத்த கொள்முதல் பெறுமதி 223 மில்லியன் ரூபா மாத்திரமே ஆகும். உண்மையிலேயே இந்தத் திட்டத்திற்கு செலவு செய்யப்பட்ட தொகை 83 மில்லியன் ரூபா மாத்திரமே ஆகும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 'மின்பிறப்பாக்கி பிரிவுகளை வேறுபடுத்தல், 300 மேசைகள், கதிரைகள், 300 கணினி மின்சேமிப்புக் கலங்கள், 300 பதிப்பாக்கிகள் உட்பட நாடு முழுவதும் இத்திட்டத்தினை இணைப்பதற்கான வலையமைப்பு பணி ஆகிய விடயங்கள் எமது சேவைக்குள் அடங்குகின்றன.

அதற்காகவே மேற்படி தொகை எம்மால் பெறப்பட்டுள்ள அதேநேரம் தற்போது புதிய தொழில்நுட்பத்தைக் கொள்வனவு செய்வதற்கு முயற்சிகள் இடம்பெற்று வருகின்றமையால் நாம் வழங்கிய திட்டத்தை விமர்சிக்கின்றார்கள்' என்று தன்பக்க கருத்துக்களை அவர்வெளிப்படுத்தினார்.

இதேநேரம் ஈவிஸ் குழுமத்தின் தலைவர் 02.06.2022 அன்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஒரு தொகையையும், பின்பு நடைபெற்ற 06.06.2022 செய்தியாளர் சந்திப்பில் ஒரு தொகையையும் குறிப்பிடுகின்றார். இவ்வாறு நிறுவனத்தின் தலைவரின் கருத்துக்களில் முன்னுக்குப் பின்னர் முரண்பாடுகள் காணப்படுவதும் கேள்விகளை எழுப்புவதாக உள்ளது.

அதேவேளை குறித்த திட்டத்திற்காக 644மில்லியன் ரூபா செலவிட்டதாக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பிரசன்ன குணசேன குறிப்பிடுவதோடு கணக்காய்வாளர் நாயகம் 500 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதாக கூறுகின்றார். ஆனால் ஈ.விஸ். நிறுவனம் 223 மில்லியன் ரூபாவே தமது மொத்த பெறுமதித் தொகை என்கிறது.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவரினதும் ஈ.விஸ். நிறுவனத்தினதும் கருத்துக்களின் அடிப்படையில் பார்த்தால் 421 மில்லியன் ரூபாவிற்கு என்ன நடந்துள்ளது என்ற கேள்வி எழுகின்றது. கணக்காய்வாளர் மற்றும் ஈ.விஸ் நிறுவனத்தின் கருத்துக்களின் அடிப்படையில் பார்த்தால் 277 மில்லியன் ரூபா காணாமல் போயுள்ளது.

சுகாதார அமைச்சுக்கான கணனித் தொழில்நுட்ப வசதியை ஏற்படுத்திக் கொள்வதற்காக முதலில் 5நிறுவனங்களின் மூலமாக விலை மனு கோரப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தான் ஈ.விஸ் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் 'பொதுவாகவே' கோப்' குழுவிலும் 'கோப்பா 'குழுவிலும் பேசப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கையோ அல்லது இது தொடர்பான மேலதிக விசாரணைகளோ இடம்பெறுவதில்லை. இது ஒரு பாரிய குறைபாடாகவே இருக்கின்றது' என குறிப்பிடுகின்றார் கோப் குழுவின் முன்னாள் அங்கத்தவரான நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலகராஜ்.

'இக்குழுக்களில் பேசப்படுகின்ற அனைத்து மோசடிகள் தொடர்பாக அதனுடைய அறிக்கை பாராளுமன்ற சபாநாயகருக்கு கையளிக்கப்படும்.அவர் அதனுடைய மேலதிக நடநடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.ஆனால் அது மீண்டும் ஒரு அரசியல் ரீதியான செயற்பா



டாக மாறுகின்ற காரணத்தால் அது அடுத்த கட்டத்தை நோக்கிப் பயணிப்பதில்லை. இதுவே பெரும் குறைபாடாக இருக்கின்றது' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் 'இதனை மாற்றி அமைக்க வேண்டுமாக இருந்தால் அந்த குழுக்களில் நீதிபதிகளை நியமித்து இது தொடர்பான சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் மாத்திரமே அரச துறைகளில் நடைபெறுகின்ற ஊழலை ஒழிக்க முடியும்' எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில், காணாமல்போயுள்ள மக்கள் பணமான 421மில்லியன் ரூபாவுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துவதற்கான பகிரங்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

**எஸ்.தியாகு**
(நுவரெலியா தினகரன்)

# சர்வதேச உயிரியல் ஒலிம்பியாட் போட்டிக்கென இலங்கை மாணவர் நால்வர் இம்முறை தெரிவு

## இரண்டு பேராசிரியர்கள் உட்பட 6பேர் அர்மேனியா செல்கின்றனர்

சர்வதேச உயிரியல் ஒலிம்பியாட் போட்டியானது (IBO) உலகளாவிய ரீதியாக நடத்தப்படும் சர்வதேச தரம் வாய்ந்த போட்டியாகும். இருபது வயதுக்குட்பட்ட உலகின் மிகவும் திறமையான மாணவர்கள் ஒரே மைதானத்தில் போட்டியிட்டு வெற்றி மகுடத்தை சூடிக்கொள்வதற்காக போட்டியிடுகின்றனர். இந்தப் போட்டி தொடர்பாக உலகில் அநேகர் கவனம் செலுத்தி வருகின்றனர். 1990 ஆம் ஆண்டு செக்கோஸ்லோவாக்கியாவில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போட்டிக்கு இலங்கையிலிருந்து இம்முறை நான்கு பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். உயிரியல் பாடத்தில் நிபுணத்துவத்தை வெளிப்படுத்தும் மாணவர்களை ஒன்றிணைப்பதே இந்தப் போட்டியின் நோக்கமாகும். இதுதவிர இந்தப் பாடத்திற்காக உலகம் முழுவதுமுள்ள மாணவர்களை ஊக்குவிப்பதே இப்போட்டியின் முன்னணி நோக்கமாக உள்ளது.

உலகில் கல்வி தொடர்பாக அதிக ஆர்வத்தை வெளிப்படுத்துகின்ற நாடொன்றை, போட்டியை நடத்தும் நாடாக ஒலிம்பியாட் குழு பரிந்து செய்யும். இந்த ஆண்டுக்கான சர்வதேச உயிரியல் ஒலிம்பியாட் போட்டியை நடத்தும் நாடு என்ற பெருமையை அர்மேனியா பெறுகின்றது. உலகம் முழுவதும் உள்ள பிள்ளைகளுக்கு மருத்துவக் கல்வி வழங்கும் பல பல்கலைக்கழகங்களை ஸ்தாபித்துள்ள அர்மேனியா நாடானது, உலக மருத்துவத் துறைக்கு பல புதிய கண்டுபிடிப்புகளை வழங்கியுள்ள அபிவிருத்தி அடைந்த நாடாகும். இந்த ஆண்டு, அர்மேனியாவில் உள்ள யெரெவான் அரச பல்கலைக்கழகத்தில் நடைபெறும் போட்டியில் இலங்கை சார்பில் பங்கேற்கும் அணியில் நான்கு மாணவர்களும், நடுவர் மன்ற உறுப்பினர்களாக இரண்டு பேராசிரியர்களும் உள்ளடங்குகின்றனர். இலங்கையின் உயிரியல் விஞ்ஞான பிரிவில் பயிலும் மாணவர்களுக்கு இடையில் இலங்கை உயிரியல் நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட போட்டியின் பின்னரே, சர்வதேச உயிரியல் ஒலிம்பியாட் போட்டியை பிரதிநிதித்துவப்படுத்த இந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இப்போட்டியில் கொழும்பு டி.எஸ். சேனநாயக்க வித்தியாலயத்தைச் சேர்ந்த கார்த்திக் பிரவீன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஏ.ஹர்ஷன், பலாங்கொடை ஆனந்த மைத்திரி வித்தியாலயத்தைச் சேர்ந்த பிரவீன் தென்னகோன் மற்றும் கண்டி மஹாமாயா மகளிர் பாடசாலையைச் சேர்ந்த சிலுனி விக்கிரமதிலக ஆகிய நான்கு மாணவர்கள் இலங்கையை பிரதிநிதித்துவப் படுத்தி அர்மேனியாவிற்கு செல்லவுள்ளனர்.



இப்போட்டியின் விசேட ஜூரி உறுப்பினர்களாக பேராசிரியர் ஹிரான் அமரசேகர மற்றும் விருது வென்ற பேராசிரியர் எம். ஜயந்த விஜேரத்ன ஆகியோரும் பங்கேற்கின்றனர். இலங்கை நெருக்கடியான சூழலை எதிர்நோக்கியுள்ள இத்தருணத்தில் உலகமே ஆர்வமுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சர்வதேச தரத்திலான போட்டிகளுக்கு இலங்கை மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமையானது இலங்கைக்குக் கிடைத்த கௌரவம் ஆகும். உலகப் புகழ்பெற்ற கல்வித் துறைச் சார்ந்த போட்டியொன்றில் இலங்கை மாணவர்கள் பங்கேற்பது எமக்கு அதிக மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக பேராசிரியர் ஹிரான் அமரசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நடவடிக்கைகளுக்கு இலங்கையில் உள்ள QIB பல்கலைக்கழகத்தினர் வழங்குகின்ற பங்களிப்பு இன்றியமையாதது என பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

# கிழக்கின் குரல்





கிண்ணியா மத்திய கல்லூரி மைதானத்தில் பெருநாள் தொழுகையும் விசேட துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது. (படம்: கிண்ணியா மத்திய நிருபர்)



கல்முனை முஹம்மதிய்யா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் ஹுதா ஜும்ஆ பள்ளிவாசல் இணைந்து ஏற்பாடு செய்திருந்த புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை கல்முனை கடற்கரை வீதியில் உள்ள ஹுதா திடலில் நேற்று (10) இடம்பெற்றது.



புனித ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையும் பிரசாங்கமும் ஜாமிஉத் தௌஹீத் ஜும்ஆ பள்ளிவாசலின் ஏற்பாட்டில் அஷ்ஷெய்க் எம்.எச்.றியாஸ் காஷிபி தலைமையில் நிந்தவூர் அல்அஷ்ரக் தேசிய பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம். (படம்: அம்பாறை மாவட்ட குறூப் நிருபர்)



றொட்டவெவ மஸ்ஜிதுல் ஹுதா ஜும்மா பள்ளிவாயலில் பேஷ் இமாம் என்.நஸார்தீன் மௌலவி தொழுகை நடத்தியதுடன், ஹஜ் பெருநாளில் மகிமை பற்றி குத்பா பிரசங்கமும் நிகழ்த்தினார். (படம்: றொட்டவெவ குரூப் நிருபர்)



காத்தான்குடியில் ஹஜ் பெருநாள் திடல் தொழுகை நேற்று (10) ஞாயிற்றுக்கிழமை காலை காத்தான்குடி கடற்கரையில் இடம்பெற்றது. (படம்: புதிய காத்தான்குடி தினகரன்)



மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் புனித ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை நேற்று (10) காலை நடைபெற்றது.
(படம்: பெரியநீலாவணை விசேட, மருதமுனை,பெரியநீலாவணை தினகரன் நிருபர்கள்)

### அம்பாறை மாவட்டத்தில்

## அமைதியான ஹஜ்ஜுப் பெருநாள் கொண்டாட்டம்

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை (10) 'ஈதுல் அழ்ஹா' புனித ஹஜ்ஜுப் பெருநாளை மிகவும் மகிழ்ச்சியாக அமைதியான முறையில் கொண்டாடினர்.

பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, இறக்காமம், பாலமுனை, ஒலுவில், நிந்தவூர், சாய்ந்தமருது, சம்மாந்துறை, மருதமுனை, கல்முனை ஆகிய பிரதேசங்களில் திறந்தவெளிகளிலும், மஸ்ஜித்துக்களிலும் ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகைகள் நடைபெற்றன. இதில் ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்களும் கலந்து கொண்டனர். அதிகாலை வேளையிலேயே பெருநாள் தொழுகை நடைபெற்றன.

வடக்குக் கிழக்கு உட்பட நாட்டின் சகல பிரதேசங்களிலும், முஸ்லிம்கள் 'ஈதுல் அழ்ஹா' புனித ஹஜ்ஜுப் பெருநாளை விமர்சையாக கொண்டாடினர்.

ஹஜ்ஜின் மகத்துவம், கூட்டு உழ்ஹிய்யா, பெருநாளின் சிறப்புகள், சமூக ஒற்றுமை, இன நல்லுறவு, சக வாழ்வும் போன்ற கருப்பொருளில் குத்பா பேருரைகள் அமைந்திருந்ததோடு நாட்டில் அமைதி பெற வேண்டுமென விசேட துஆ பிராத்தனைகளும் நிகழ்த்தப்பட்டன.

இதனைத் தொடர்ந்து உறவினர்களின் வீடுகளுக்குச் சென்று இனிப்புப் பண்டங்கள் வழங்கி மகிழ்ந்தனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பெரும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் ஸ்தீரதன்மைக்கு மத்தியில் புனித ஹஜ் பெருநாள் கொண்டாடினர்.

## பெண் பொலிஸாருக்கு பாலியல் தொல்லை; பொலிஸ் சாரதி கைது

**மண்டூர் தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தருக்கு பாலியல் தொல்லை கொடுத்த பொலிஸ் சாரதியை எதிர்வரும் 20ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் உத்தரவிட்டார்.

குறித்த பொலிஸ் நிலையத்தில் சாரதியாக கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் அங்கு கடமையாற்றும் பெண் பொலிஸ் உத்தியோகத்தரை கையைப்பிடித்து பாலியல் தொல்லை கொடுத்ததாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் முறையிட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்திற்கு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கொண்டு வந்ததையடுத்து உடனடியாக குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டதுடன் அவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆலோசனை வழங்கியதையடுத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் அம்பாறையை சேர்ந்த 35 வயது பொலிஸ் சாரதியாவார்.

## மட்டக்களப்பு நகரில் திருடப்பட்ட பதினெட்டு துவிச்சக்கரவண்டிகளுடன் ஒருவர் கைது

**மட்டக்களப்பு குறூப் நிருபர்**

மட்டக்களப்பு நகரில் துவிச்சக்கரவண்டிகளைதிருடிவந்த காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவரை (07) கைது செய்ததுடன் திருடப்பட்ட 18 துவிச்சக்கரவண்டிகளை மீட்டுள்ளதாக மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். மட்டு. அரசடிபகுதியில் உள்ள தனியார் கம்பனி ஒன்றிற்கு முன்னால் சம்பவதினமன்று நிறுத்திவைக்கப்பட்டிருந்த துவிச் சக்கரவண்டியை ஒருவர் திருடும் போது அந்த தனியார் கம்பனி பணியாட்கள் குறித்த திருடனை மடக்கி பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதனையடுத்துபொலிசார்மேற்கொண்ட விசாரணையில் தினமும் காத்தான்குடியில் இருந்து பஸ்வண்டியில் பிரயாணித்து மட்டு நகருக்கு வந்து அங்கு வீதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் துவிச்சக்கரவண்டிகளை திருடிக் கொண்டு சென்று அதனை காத்தான்குடி பிரதேசத்தில் 17 ஆயிரம் ரூபா தொடக்கம் 25 ஆயிரம் வரையில் விற்பனை செய்துள்ளதாகவும் சில துவிச்சக்கரவண்டிகளை கழற்றி பாகங்களாக விற்பனை செய்துள்ளதாகவும் போதை வஸ்துக்கு அடிமையான நிலையில் அதற்கு பணத் தேவைக்காக துவிச்சக்கரவண்டிகளை திருடி விற்பனை செய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## இலங்கையில் தொடர்ந்தும் மோசமாக மீறப்பட்டுவரும் ஊடக சுதந்திரம்

### வவுனியா ஊடக அமையம் கண்டனம்

**வவுனியா விசேட நிருபர்**

இலங்கையில் தொடர்ந்தும் ஊடக சுதந்திரம் மோசமாக மீறப்பட்டு வருகின்றது என்பதை கொழும்பில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த நான்கு ஊடகவியலாளர்கள் மீது பாதுகாப்பு தரப்பின் மேற்கொண்ட தாக்குதல் வெளிப்படுத்தியுள்ளது என வவுனியா ஊடக அமையம் தெரிவித்துள்ளது. சக்தி மற்றும் சிரச ஊடக வலையமைப்பின் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் வவுனியா ஊடக அமையம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து மக்கள் தன்னெழுச்சியாக கோட்டா அரசாங்கத்திற்கு எதிராக போராடி வருகின்றனர். அதன் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, பிரதமரின் வீடு என்பன மக்களால் முற்றுகையிடப்பட்டது.

குறித்த சம்பவத்தின் போது ஜனநாயகத்தின் நான்காவது தூணாக களத்தில் நின்று மக்களுக்கு உண்மை நிலையை வெளிக் கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் மீது மிலேச்சத்தனமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை ஏற்றுக் கொள்ள முடியாது. சக்தி, சிரச ஊடக வலையமைப்பின் ஊடகவியலாளர் நால்வரும் தாம் ஊடகவியலாளர் என வெளிப்படுத்திய பின்னரும், பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் இணைந்து காட்டு மிராண்டித்தனமாக தாக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளது.

தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்கள் விரைவில் நலன்பெற இறைவனை வேண்டுகின்றோம். அத்துடன், குறித்த சம்பவம் தொடர்பில் உடனடியாக நீதியான விசாரணைகள் இடம்பெற வேண்டும் என வவுனியா ஊடக அமையம் கோருவதுடன், சம்பந்தப்பட்ட பாதுகாப்பு தரப்பினர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு பாதிக்கப்பட்ட நான்கு ஊடகவியலாளர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என வவுனியா ஊடக அமையம் வலியுறுத்துகிறது.

தினகரன் வடக்கின் உதயம் Vadakkin Uthayam

## காந்தி விஞ்ஞான பூர்வ தடையியல் பல்கலை விரிவுரையாளர்கள் இலங்கை வருகை

**கோப்பாய் குறூப் நிருபர்**

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் கோரிக்கையை ஏற்று இந்திய குஜராத் மாநிலத்தில் அமைந்துள்ள காந்தி விஞ்ஞான பூர்வ தடையியல் பல்கலைக்கழகத்தின் சிறப்பு விரிவுரையாளர்கள் நேற்று முன்தினம் (09) சனிக்கிழமை இலங்கை வந்தனர்.

அண்மையில் இந்தியா சுற்றுப் பயணம் மேற்கொண்ட வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா குஜராத் மாநிலத்தில் உள்ள காந்தி விஞ்ஞான பூர்வ தடையியல் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் மேற்கெண்டார்.

இந்நிலையில் ஆளுநர் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இலங்கைப் பொலிசாருக்கு தடையியல் தொடர்பில் சிறப்பு பயிற்சி வழங்க வருமாறு அழைப்பு விடுத்



திருந்தார். இந்நிலையில் இலங்கை வந்த குறித்த பல்கலைக்கழக சிறப்பு விரிவுரையாளர்கள் ஐந்து நாட்கள் தங்கி நின்று இலங்கை தடையியல் பொலிஸார் மற்றும் சட்ட மாஅதிபர் திணைக்கள அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கவுள்ளனர்.

அதனோடு குஜராத் காந்தி விஞ்ஞானபூர்வ தடையியல் பல்கலைக்கழகத்தின் கிளை ஒன்றினை இலங்கையில் ஸ்தாபிப்பதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.



ஜனாதிபதி மாளிகைக்கு திரண்ட மக்களின் போராட்ட வெற்றிக்கு முல்லைத்தீவு மக்கள் நேற்று ஆதரவு தெரிவித்து வெடி கொளுத்தினர். (படம்: புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

## மன்னாரிலிருந்து வெளி மாவட்டங்களுக்கான போக்குவரத்து சேவைகள் நிறுத்தம்

**தலைமன்னார் விஷேட நிருபர்**

ஜனாதிபதியை பதவி விலக கோரி நாட்டின் பல பாகங்களிலும் போராட்டம் தீவிரமடைந்திருந்தது. இவ் போராட்டத்தை பொறுத்தமட்டில் மன்னாரில் வழமையான நிலைமை காணப்பட்டபோதும் வெளி மாவட்டங்களுக்கான போக்குவரத்து சேவைகள் இடம்பெறவில்லை.

இப் போராட்ட நாளில் சில மாவட்டங்கள் முடங்கி காணப்பட்டபோதும் மன்னாரில் வழமையான செயல்பாடுகள் இடம்பெற்றன.

ஆனால் பிரயாணிகளின் போக்குவரத்து மிக குறைவாக காணப்பட்டதுடன் தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை போக்குவரத்து சேவைகள் உள்ளூர் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன் வெளி மாவட்ட சேவைகள் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## சிறுவர்களுக்கு இலவச இன்சுலின்; தியாகி அறக்கொடை நடவடிக்கை

**கோப்பாய் குறூப் நிருபர்**

நீரிழிவு நோய்க்கான இன்சுலின் மருந்தை ஏற்றும் சிறுவர்களுக்கு இலவசமாக மருந்தை பெற்றுக் கொடுப்பதற்கு தயாராக இருப்பதாக தியாகி அறக்கொடை நிலையத்தின் ஸ்தாபகர் வாமதேவன் தியாகேந்திரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், நீரிழிவு நோய்க்காக ஏற்றப்படும் இன்சுலின் மருந்து ஊசி என்பன தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில் சிறுவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பாதிக்கப்படும் சிறுவர்கள் சிலர் என்னிடம் நேரில் வந்து உதவி பெற்றுள்ளனர். மேலும் நீரிழிவு நோய்க்குள்ளான சிறுவர்கள் என்னிடம் நேரடியாக வருமிடத்து அவர்களுக்கான மருந்தை இலவசமாக பெற்றுக் கொடுப்பதற்கு தயாராக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜனநாயகம் வெற்றி பெற்றிருக்கின்றது; தமிழர்களின் உரிமைக் குரலுக்கு நீதி கிடைக்குமா?

**காரைதீவு குறூப் நிருபர்**

இன்றைய இறுக்கமான காலகட்டத்தில் ஜனநாயகம் வெற்றி பெற்றிருக்கின்றது. அநியாயம், அடாவடித்தனம், அதர்மம், அயோக்கியத்தனம் அழிந்திருக்கின்றது. இதே நாட்டில் பிறந்து பல்வேறு சொல்லொணா துன்ப துயரங்களை அனுபவித்த தமிழர்களின் நீண்ட கால உரிமைக் குரலுக்கு நீதி கிடைக்குமா?

இவ்வாறு காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டின் சமகால அரசியல் நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்..

நாங்கள் எங்களுடைய இன விடுதலைக்காகவும், நில விடுதலைக்காகவும் ஜனநாயக ரீதியாக இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

எமது இந்த அவல குரலும், இந்த கூக்குரலும் வருகின்ற அரசாங்கத்திற்காவது கேட்குமா? என்கின்ற கேள்வி எங்களிடம் எழும்புகின்றது.

ஜனநாயக போராட்டத்திற்கு நாங்கள் முழு ஆதரவையும் தந்திருக்கின்றோம். தொடர்ச்சியாக நாங்கள் பெரும்பான்மை இனத்தவர்களோடு வாழ தயாராக இருக்கின்றோம்.

இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் சுய உரிமையோடு சுதந்திரமாக வாழ வேண்டும், படிக்கின்ற ஒவ்வொரு இளைஞர்களுக்கும்



வேலை வாய்ப்பு உட்பட அனைத்திலும் இனிவரும் காலங்களும் புறக்கணிப்பில்லாமல் எங்களை ஏனைய மனிதர்கள் போன்று நடந்து கொள்ளக்கூடிய ஒரு அரசாங்கம் அமைய வேண்டும் என்பதே எங்களுடைய எதிர்பார்ப்பாக இருக்கின்றது என்றார்.

## யாழில் சைக்கிள் பேரணி



**யாழ்.விசேட நிருபர்**

ஜனாதிபதி மற்றும் பிரதமரை பதவி விலக கோரி யாழில் சைக்கிள் பேரணி ஒன்று இடம் பெற்று, யாழ்.மத்திய பேருந்து நிலையம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இருந்து யாழ். நகர் நோக்கி நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 10 மணியளவில் துவிச்சக்கர வண்டிப் பேரணி ஆரம்பிக்கப்பட்டது.

யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகள், தொழிற்சங்கங்கள், அரசியற் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்த பேரணி ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த பேரணி யாழ்.மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக சென்று , அங்கு கூடி கவனயீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், சிவில் அமைப்புகளால் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு வலு சேர்க்கும் முகமாக யாழ்ப்பாணத்தில் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

# கொழும்பில் அலையெனத் திரண்ட மக்கள்


















# கர்ப்பிணி தாய்மார்களுக்கு போசாக்குள்ள உணவுகளை வழங்கல்

கர்ப்பிணி தாய்மார்களுக்கு போசாக்குள்ள உணவுகளை வழங்குவது ஊடாகவே பிறக்கப் போகும் குழந்தைகள் முழு ஆரோக்கியத்துடன் உலகை பார்க்கும் என்பதற்கு அமைய லிந்துலை பிரதேச சுகாதார பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 700 கர்ப்பிணி தாய்மார்களுக்கு போசாக்குள்ள உணவு பொதிகளை வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வானது லிந்துலை பிரதேசத்திற்கு பொறுப்பான பொது சுகாதார வைத்திய அதிகாரி திருமதி ரேஷ்ணி துரைராஜின் தலைமையில் பிரதேசத்தில் உள்ள சுகாதார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

கர்ப்ப காலத்தில் தாய்மார்கள் போசாக்குள்ள உணவை உட்கொள்வது ஊடாகவே சிசுவின் மூளை வளர்ச்சி உட்பட அனைத்தும் துரிதமாக வளர்ச்சி அடையும் என நிகழ்வில் கலந்து கொண்ட லிந்துளை பிரதேச பொது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். இந்த வேலைதிட்டத்திற்கு முழுமையான அனுசரணையை தொடர்ந்தும் வேர்ல்ட் விஷன் நிறுவனம் வழங்கும் வருவதாகவும் வைத்திய அதிகாரி தெரிவித்தார். சிசுவின் மூளை வளர்ச்சியின் 80 தொடக்கம் 90 வகையான பகுதி 3 வயது காலப்பகுதியிலும் எஞ்சிய 10 தொடக்கம் 20 வீதமான பகுதி 9 தொடக்கம் 10 வயது காலப்பகுதிக்குள்ளும் வளர்ச்சி அடைந்து பூர்த்தியடையும் நிலையில், ஒவ்வொரு கர்ப்பிணி தாய்மாரும் முதல் 1000 நாட்கள் மிகுந்த அவதானத்துடன் போசாக்குள்ள உணவையும் உட்கொண்டால் பிறக்கும் குழந்தைகள் முழு ஆரோக்கியத்துடன் பிறக்கும் என பிரதேசத்திற்கு பொறுப்பான பொது சுகாதார வைத்திய அதிகாரி தனது உரையில் கூறினார்.

குறிப்பாக சிசு தாயின் கருவறையில் இருக்கும் 10 மாதங்கள் அதாவது 280 நாட்கள் என்பது மிகவும் முக்கியமான காலப்பகுதி என்றும் அவர் அறிவுறுத்தினார்.



ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் வெளியேறுமாறு கோரி நாடு முழுவதும் மக்கள் ஜூலை 9ஆம் திகதி போராட்டங்களை ஏற்பாடு செய்திருந்ததுடன் பதுளை மாவட்டத்தின் பதுளை, பண்டாரவளை, ஹாலிஎல பிரதேச மக்களும் அந்தப் போராட்டங்களில் இணைந்து கொண்டனர். ( ஹாலிஎல விசேட நிருபர் )

# பன்விலை றாகஷாவ தோட்ட அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம்

**(புசல்லாவ தினகரன் நிருபர் நவநீதன்)**

கண்டி மாவட்ட பன்விலை றாகஷாவ தோட்டம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நிகழ்வு திங்கட்கிழமையாகிய இன்று விநாயகர் வழிபாட்டோடு ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து கணபதி ஹோமம் நவக்கிரக,ஹோமம் என்பன இடம்பெற்று சுவாமிகளின் பட்டினப்பிரவேசம் இடம்பெறும். இன்றைய தினம் கண்திறத்தல் நிகழ்வோடு அடியவர்களுக்கு விபூதிப் பிரசாதமும் வழங்கப்படும். நாளை (12.07.20220 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு புண்யாஹவாசனம், விசேட ஹோமம் என்பன இடம்பெற்று எண்ணெய்க்காப்பு சாத்துதல் நிகழ்வு இடம்பெறவுள்ளது. அத்துடன் அன்று அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.

13.07.2022 புதன்கிழமையன்று மஹா கும்பாபிஷேக நிகழ்வு இட்மபெறும். பின்னர் பிரதான கலச அபிஷேகம் இடம்பெற்று திருக்கதவு திறத்தல், மஹா அபிஷேகம், தீபாராதனை இடம்பெற்று மகேஸ்வர பூசையோடு அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.மஹா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 12 நாட்களுக்கு மண்டலாபிஷேகமும் இடம்பெறும்.

25.07.2022 திங்கட்கிழமை மண்டலாபிஷேக பூர்த்தியன்று காலை அஷ்டோத்திரசத(108)சங்காபிஷேகம்இடம்பெறும். கும்பாபிஷேக நிகழ்வினை சாதக சிரோண்மணி சத்யோதஜாத சிவாச்சாரியார் சிவஸ்ரீ தெ.கு.ஜனேந்திரராஜா குருக்கள் நிகழ்த்தி வைக்கவுள்ளார்.நம் நாட்டில் பல்வேறு வேதனை சோதனைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வரும் இக்காலத்தில் மகா கும்பாபிஷேக நிகழ்வு இடம்பெறுவதால் இவ் தெய்வத் தன்மை வாய்ந்த நிகழ்வில் பக்தர்களை கலந்து இறையருளைப் பெற்றுய்யுமாறு ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் வீ.முத்துக்கிருஷ்ணன் மற்றும் இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# டிக்கோயா ரோட்டறி கழகத்தின் தலைவராக தியாகு தெரிவு



சர்வதேச ரோட்டறி கழகத்தின் டிக்கோயா கழகத்தின் தலைவராக சுப்பிரமணியம் தியாகு 20222023 ஆண்டிற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் சுப்பிரமணியம் பூரணம் தம்பதிகளின் புதல்வராவார். இவர் கந்தப்பளை மெதடிஸ்ட் கல்லூரியிலும் நுவரெலியா புனித சவேரியார் கல்லூரியிலும் கண்டி அசோகா வித்தியாலயத்திலும் கல்வி கற்றதுடன். உயர் கல்வியை நுவரெலியா பரிசுத்தி திரித்துவ மத்திய கல்லூரியில் கற்றார்.

கடந்த 30 வருடங்களாக சுதந்திர ஊடகவியலாராக செயற்பட்டு வருகின்ற இவர், நுவரெலியா இந்து கலாசார பேரவையின் முன்னாள் செயலாளராகவும் நுவரெலியா ஆவேலிய சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும் நுவரெலியா பொது வைத்தியசாலையின் முன்னாள் அபிவிருத்தி சங்க செயலாளராகவும் நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர் சங்கத்தின் தேசிய அமைப்பாளராகவும் ஆசிய வலய ஊடகவியலாளர் சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினராகவும் இன்னும் பல பொது அமைப்புகளின் உறுப்பினராகவும் செயற்பட்டு வருகின்றார்.

தன்னுடைய காலப்பகுதியில் ரோட்டறி கழக தலைவராக பாடசாலை மாணவர்களின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படவுள்ளதாகவும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக புலமைப்பரிசில் திட்டங்களை செயற்படுத்துவதற்கு தன்னுடைய குழுவினருடன் இணைந்து செயற்படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் டிக்கோயா ரோட்டறி கழகத்தின் செயலாளராக டாக்டர் ரவிவர்மன் தெரிவு செய்யபட்டுள்ளதுடன் பொருளாளராக பாலகிருஸ்ணன் திருச்செல்வமும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் டிக்கோயா ரோட்டறி கழகம் பல பொது வேலைத்திட்டங்களை ஹட்டன் உட்பட பல பகுதிகளிலும் முன்னெடுத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீதியில் முறிந்து வீழ்ந்த பாரிய மரம்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

நுவரெலியா நகரின் கெலேகால சந்திக்கு அருகில் வீதியில் பாரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததன் காரணமாக (09) வாகன போக்குவரத்து தடைபட்டது. நுவரெலியா பிரதேசத்தில் வீசிய பலத்த காற்று காரணமாக வீதிக்கு அருகாமையிலுள்ள பழைய மரமொன்று இவ்வாறு முறிந்து வீழ்ந்தது. நுவரெலியா மாநகர சபை குறித்த மரத்தை வெட்டி அகற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்தது.



## பெயர் மாற்றம்

கொழும்பு மாவட்டம் கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவின் 40, மஹபுத்கமுவ, கொட்டிகா வத்த, அங்கொட என்ற முகவரியில் வசிக்கும் **மடபாத்தகே தொன் மலீஷ மலிந்த** ஆகிய நான், இன்று முதல் **அப்துல் மலிக்** என்றழைக்கப் படுவேனென இலங்கை சனநாயக சோஷ லிசக் குடியரசுக்கும் பொது மக்களிற்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**அப்துல் மலிக்**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

### சக்தி மற்றும் வலு அமைச்சு

### நீடிப்பு அறிவித்தல்

**யாழ்ப்பாண விமானநிலையத்திற்கு 15,000 லீற்றர் கொள்ளளவுள்ள இரண்டு விமானநிலைய எரிபொருள் நிரப்பும் சாதனங்களை வடிவமைத்தல் மற்றும் வழங்கல்**

**B/25/2022**

மேலேயுள்ள தலைப்புக்களின் கீழ் இந்த புதினப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரங்கள் தொடர்பான விலைமனுக்கோரல் செயற்பாடு தொடர்பாக விலைமனுக்கோரல் ஆவணங்களை ஏற்கனவே கையேற்றுக் கொண்டவர்கள் மற்றும் பங்குபெற ஆர்வ முள்ள வளமுள்ள விலைமனுதாரர்களின் அவதானத்தை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இத்தால் ஈர்க்கின்றது.

2022.07.08 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு தீர்மானிக்கப்பட்ட விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2022.07.15 ஆம் திகதியன்று பி. 2 மணி வரையும் இப்போது நீடிக்கப்பட்டுள்ளது.

விலைமனுவின் செல்லுபடியாகும் கால எல்லையானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 91 நாட்களாகவிருத்தல் வேண்டும் (அதாவது 2022.10.14) என்பதை கவனத்திற் கொள்ளல் வேண்டுமென்பதுடன் விலைமனுப் பிணையானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு (அதாவது 2022.11.11 ஆம் திகதி வரையும்) என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.

முன்னைய விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்ட அனைத்து ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி : 0094 11 5455331**
**தொலைநகல் : 0094 11 5455424**

## லங்கா கிரடிட் அண்ட் பிஸ்னெஸ் பினான்ஸ் பிஎல்சி இன் மெய்நிகராக்கல் 60 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தின் அறிவித்தல்

2022 மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவுற்ற வருடத்திற்கான லங்கா கிரடிட் அண்ட் பிஸ்னெஸ் பினான்ஸ் பிஎல்சி இன் மெய்நிகராக்கல் 60 ஆவது வருடாந்த பொது கூட்டமானது 2022 ஜுலை 29 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு கொஹுவள, எஸ்.டி.எஸ். ஜயசிங்ஹ மாவத்தை, 76 ஆம் இலக்கத்தில் கட்புல செவிப்புல வழியாக நடைபெறும் என்பதற்கான அறிவித்தல் இத்தால் வழங்கப்படுகின்றது.

கொழும்பு பங்கு பரிவர்தனையின் 7.5 (b) இலக்கமுடைய சட்டத்தின் பட்டியலிடப்பட்ட சட்டங்களுக்கமைவாக www.cse.lk என்ற இணையத்தில் லங்கா கிரடிட் அண்ட் பிஸ்னெஸ் பினான்ஸ் பிஎல்சி இன் வருடாந்த அறிக்கையானது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போதுள்ள சூழ்நிலை காரணமாக கம்பனியானது வருடாந்த அறிக்கையின் அச்சடிக்கப்பட்ட பிரதியொன்றை வழங்குவதற்கு இயலாமலுள்ளதென மேலும் நாம் அறிவிக்க விரும்புகின்றோம்.

**குறிப்பு:** மெய்நிகராக்கல் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பங்குபெற விரும்பும் பங்குதாரர்/ பதிலாள் உரித்தாளர் மேலேயுள்ள கொழும்பு பங்கு பரிவர்தனை தொடர்பில் அமைந்துள்ள சேர்க்கப்பட்டுள்ள ஒன்லைன் பதிவு செய்தல் படிவத்தை பூர்த்தி செய்வதன் மூலம் அவர்களின் பங்குபெறுதலை பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சபை பணிப்பாளர்கள் மற்றும் கம்பனியின் முக்கிய அலுவலர்கள் தவிர எந்தவொரு பங்குதாரரும்/ பதிலாள் உரித்தாளர் மேற்குறிப்பிட்ட அமைவிடத்தில் நேரடியாக சமுகமளிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**லங்கா கிரடிட் அண்ட் பிஸ்னெஸ் பினான்ஸ் பிஎல்சி**
**இன் சபையின் கட்டளை பிரகாரம்**

**செயலாளர்கள்**
**பி. ஆர். செக்கிரட்டேரியல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்**
**கொழும்பு.**
2022 ஜுலை 7ஆம் திகதியன்று

## இலங்கை தென் மாகாண, மாகாண சபை

**தென் மாகாண கமத்தொழில், கமநல அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு வழங்கல் மற்றும் விநியோகம், வர்த்தகம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

### கிரீன் மெகா கோப் சிட்டி ஷொப்புக்களுக்கான நவீன சந்தை உபகரணங்களை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதல்

**Contract No.: SPCOD(G/2/5/4/2)/GOODS/NCB/2022/01**

1. இலங்கை தென் மாகாண மாகாண சபையானது இலங்கை அரசாங்கத்திடமிருந்து தென் மாகாண, மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள ஆகுசெலவிற்காக மானியமொன்றை பெற்றுள்ளதுடன் இந்நிதிகளின் பகுதியொன்றை கீழே விபரிக்கப்பட்டுள்ள அட்டவணையின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் சார்பாக, கமத்தொழில், கமநல அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு வழங்கல் மற்றும் விநியோகம், வர்த்தகம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி தென் மாகாண அமைச்சின் செயலாளர் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| தொகுதி இல. | பண்டங்களின் பெயர் | விலைமனுப்பிணை (ரூபாவில்) |
|---|---|---|
| 01. | 4 Feet Single Rack – **37**<br>4 Feet Double Rack – **32**<br>3 Feet Gondola End Rack – **16**<br>4'x6' Bulk bin – **01**<br>Cashier counter – **02** | 56,000.00 |
| 02. | 6x2 Deep Freezer (Glass top Ice Cream) – **03**<br>6x2 Deep Freezer (Frozen foods) – **03**<br>6x2 Deep Freezer (Meat chiller) – **02**<br>Bottle cooler (Triple door) – **03** | 65,000.00 |
| 03. | Scale Machine (Barcode printing) – **06** | 11,000.00 |

3. விலைமனுக்கோரலானது கொள்வனவு ''வழிகாட்டிகளில்'' திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படுவதுடன் இலங்கையின் அனைத்து தகைமையுள்ள விலைமனுதாரர்களும் பங்குபற்றலாம்.
4. 2022.07.11 ஆம் திகதியிலிருந்து 2022.08.02ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 6,000 இலங்கை ரூபாவை மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவாக செலுத்திய பின்னர், காலி, லபுதுவ, தக்ஷின பாய, 4ஆம் மாடி, கமத்தொழில், கமநல அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு, உணவு வழங்கல் மற்றும் விநியோகம், வர்த்தகம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு வியாபார தலைப்புக் கடிதமொன்றில் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், நீங்கள் விலைனுவிற்காக விண்ணப்பிக்கலாம். பணக்கொடுப்பனவுகள் வங்கி வரைவொன்றின் மூலம் அல்லது ரொக்கப் பணத்தில் மேற்கொள்ளப்படலாம்.
5. விலைமனுக்கோரல் ஆவணங்கள் கீழேயுள்ள அலுவலகத்தில் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் கணக்கிடல் பிரிவில் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
6. 2022 ஜுலை 25ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் வழங்கப்பட்டுள்ள அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
7. விலைமனுப்பிணைகள் விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 91 நாட்கள் கால எல்லைக்கு மாத்திரம் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் மேலேயுள்ள 2ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள தொகைக்காக தனித்தனியான விலைமனு பிணைகளுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணைகளானது உருமாதிரியில் வழங்கப்பட்டுள்ள வங்கி வரைவொன்றாகவும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகளுக்கமைவாகவுமிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்கள் 2022.08.03ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும்.
9. விலைமனுக்கள் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்,**
**கமத்தொழில், கமநல அபிவிருத்தி, நீர்ப்பாசனம்,**
**நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு,**
**உணவு வழங்கல் மற்றும் விநியோகம்,**
**வர்த்தகம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தென் மாகாணம்,**
**4 ஆம் மாடி, தக்ஷிண பாய, லபுதுவ, காலி.**

**தொலைபேசி: 091 4943088**
**தொலைநகல்: 091 2243961**

## பத்திரிகை அறிவித்தல்

### அம்பகமுவ பிரதேச செயலகப்பிரிவில் உள்ள வெளிநாட்டு மதுபான தவறணைகள் 2023ஆம் ஆண்டிற்காக குத்தகைக்குக் கொடுத்தல்

மேற்படி குறிப்பிட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகள் குத்தகை விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள் கோரல் எதிர்வரும் 2022.09.19ஆம் திகதியுடன் முடிவடையும். மேலதிக விபரங்கள் கினிகத்தேன அம்பகமுவ கோரளை பிரதேச செயலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

02. இவ் அறிவித்தலை இலங்கை சனநாயக சோஷ லிச குடியரசு வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**சிதாரா ருவினி கமகே,**
**பிரதேச செயலாளர்,**
**அம்பகமுவ கோரளை.**

2022 ஜூன் மாதம் 27ஆம் திகதி
**அம்பகமுவ கோரளை பிரதேச செயலகம்,**
**கினிகத்தேன.**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 யூலை 12ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 65,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்.**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09122J143 | LKA18223A139 | LKA36423G148 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 32,000 | 16,500 | 16,500 | 65,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2022 யூலை 12 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2022 யூலை 15 |
| வழங்கப்படும் திகதி | : 2022 யூலை 15 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2022 யூலை 12, செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலாக ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/22/ PT/07/016 | GI Channel 150x50x 20x2MM: 6M Length | **60,000.00** | **1,000.00** | 2022.07.25 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச்சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2022 ஜுலை 12 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

## வ/ப புத்தளம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

### 2022.06.30ம் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்ட வாக்குரிமை பெற்ற அங்கத்தவர் பெயர் பட்டியலை காட்சிப்படுத்தல்

வயம்ப கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளரால் விநியோகிக்கப்பட்டுள்ள 2016.08.22ம் திகதிய இல. 1981/02 எனும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள வடமேல் மாகாணத்தின் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பிரதேச செயற்குழு அங்கத்தவர்களை தேர்ந்தெடுப்பதற்காக கூட்டுறவு வாக்கெடுப்பு கட்டளைத் தொகுதியின் பிரகாரம் அங்கத்தவரின் எதிர்வரும் வாக்கெடுப்புக்காக பயன்படுத்துவதற்கு 2022.06.30ம் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்ட வாக்குரிமை பெற்ற அங்கத்தவர் பெயர் பட்டியல் 2022.07.11ம் திகதி முதல் 2022.07.25 திகதி வரையான காலத்திற்குள் சங்கத்தின் தலைமையகத்தில் மற்றும் கீழ்க்காணும் இடங்களில் காட்சிப்படுத்தப் படுவதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

| பிரதேச இலக்கம் | பிரதேசம் | காட்சிப்படுத்தப்படும் இடம் |
|---|---|---|
| 1 | நகர இலக்கம் 1 | புத்தளம் எரிபொருள் நிலையம் |
| 2 | நகர இலக்கம் 2 | புத்தளம் கிராமிய வங்கி |
| 3 | வட்டகண்டல் | வனாத்தவில்லு கிராமிய வங்கி |
| 4 | விஜயபுர | |
| 5 | வனாத்தவில்லு | வனாத்தவில்லு கோப் சிட்டி கிளை |
| 6 | எழுவன்குளம் | எழுவன் குளம் கிராமிய வங்கி |
| 7 | காரைதீவு | காரைதீவு கோப் சிட்டி கிளை |
| 8 | பாலாவி | பாலாவி கிராமிய வங்கி |
| 9 | அட்டவில்லு | கல்லடி கிராமிய வங்கி |
| 10 | பொத்துவில்லுவ | பொத்துவில்லுவ கிராமிய வங்கி |
| 11 | சிரம்பியடி | சிரம்பியடி கோப் சிட்டி கிளை |
| 12 | கல்லடி | கல்லடி கோப் சிட்டி கிளை |
| 13 | மொனரவெவ | வானாத்தவில்லு கோப் சிட்டி கிளை |
| 14 | மானவேரிய | சிரம்பியடி கிராமிய வங்கி |

இந்த அங்கத்தவர் பெயர் பட்டியலுக்கு பெயர் உட்படுத்தப்படாத அங்கத்தவர்கள் அல்லது பெயரில் பிழையாக உட்படுத்தப்பட்டமை பற்றி மேன்முறையீடு அல்லது பட்டியலுக்கு உற்படுத்தியுள்ள அங்கத்தவர் பெயர் பற்றிய எதிர்ப்புக்கள் இருப்பின் அவற்றை 2022.07.11ம் திகதி முதல் 2022.07.25ம் திகதி வரையான காலத்திற்குள் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்து மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

இந்த வாக்குரிமைபெற்ற அங்கத்தவர் பெயர் பட்டியலுக்கு உட்படுத்தப்பட்டிருப்பது 2021.06.30ம் திகதி வரை அங்கத்துவ தவணைத் தொகையை பூர்த்தி செய்து ஒரு வருடம் தாண்டிய அங்கத்தவர்களின் பெயர்கள் மட்டும் என்பதையும் கவனிக்கவும்.

**செயலாளர்,**
**வ/வ புத்தளம் ப.நோ.கூ. சங்கம்,**
**மஸ்ஜித் வீதி, புத்தளம்.**

**தொ.பே. 032-2265270**

CSIAP

THE WORLD BANK

# Invitation for Bids

**Democratic Socialist Republic of Sri Lanka**
**Ministry of Agriculture**

## National Competitive Bidding

**Climate Smart Irrigated Agriculture Project (CSIAP)**
**Project No: P163742**
**IFB No: 2022/03**

### Supplying of Seeds and Planting Material for CSIAP-NP

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Credit from the International Development Association (IDA) – World Bank towards the cost of the Climate Smart Irrigated Agriculture Project of the Ministry of Agriculture and it intends to apply part of the proceeds of this credit to eligible payments under the Contracts given in the table below.
2. The Chairman, Regional Procurement Committee (Northern Province) on behalf of the CSIAP invites sealed bids from eligible and qualified bidders for the Procurement of GOODS described in the table below.

| No | Contract No | Description of Work | Non -refundable Fee (LKR) | Bid Security Value in (LKR) and Validity Date |
|---|---|---|---|---|
| 01 | LK-MOA-300239-GO- RFB / DPDO(NP) /Seeds packs(01)/ 2022 061- Lot 01 | Supply of 8000 No's below-mentioned Seeds material; Chilli (KA-2/MICH3, pack size 5g), Tomato (KC-1 pack size 1g), Long beans (Hawari, pack size 5g), Bitter gourd (TV-White, pack size 5g), Snake gourd (MI-Short, pack size 5g), Wing bean (Krishna/SLS44, pack size5g), Luffa(LY-53,pack size 5g), Pumpkin (Patma/Arujna/Mimic, pack size 5g), Watermelon ( pack size 5g), Maize(Ruwan /Badhra, pack size 100g). Suitable alternative varieties may be quoted. | 3000.00 | 33200.00<br>1st Nov 2022 |
| 02 | LK-MOA-300239-GO- RFB / DPDO(NP) /Seeds packs(01)/ 2022 /061- Lot 02 | Supplying 8000 No's below-mentioned seeds; Amaranthus (local, pack size 20g), Brinjal (Madduvil local/TV-Purple, pack size 1g), Okra (Local-Paal Vendi, Sivappu Vendi/Haritha, pack size 5g). & 4000kg Red Onion bulb (Local Vethalan, pack size 2kg in perforated paper bags) | 3000.00 | 34400.00<br>1st Nov 2022 |
| 03 | LK-MOA-300239-GO- RFB / DPDO(NP) /Seeds packs(01)/ 2022 /061- Lot 03 | Supplying of 530 No's Diascorea PM (100-150g each), 350No's Elephant foot yam PM (100-250g each), 50 No's Lesser yam PM(100-250g each ), 260000 No's Sweet potato Cutting(wariga pola red or white, length 2ft each), 260000 No's Cassava Cuttings (Kiri kavadi, length 9''-1' each), 40 kg Finger millet(Local/Awusatha),120 kg Kodo millet(Local) and 60 kg Little millet(local). | 3000.00 | 48700.00<br>1st Nov 2022 |
| 04 | LK-MOA-300239-GO- RFB / DPDO(NP) /Seeds packs(01)/ 2022 /061- Lot 04 | Supplying of below mentioned planting Materials ; 32000 No's Papaya (Red lady/ Tanin),16000 No's Passion fruit(Local),16000 No's Moringa(PMK 01) ,16000 No's Lime(Local) and 8000 No's Guava(Apple guava ) seedlings. Suitable alternative varieties may be quoted. | 3000.00 | 66000.00<br>15th Nov 2022 |
| 05 | LK-MOA-300239-GO- RFB / DPDO(NP) /Seeds packs(01)/ 2022 /061- Lot 05 | Supplying of 8000 No's below-mentioned Planting material; Turmeric (Local, 25-50gram sprouted rhizome, pack size 1kg) and Ginger (Local, 25-50gram sprouted rhizome, pack size 1kg). | 3000.00 | 120000.00<br>15th Nov 2022 |

3. Bidding shall be conducted through National Competitive Bidding (NCB).
4. Bidders are free to bid for more than one Contract and / or quote for one or more lots in same Bid provided that, if stated in respective Bidding Document but selections , will be made according to the criteria specified, financial and other capacity limits of the Bidder.
5. Interested bidders may obtain further information from **Deputy Project Director**, **Climate Smart Irrigated Agriculture Project, Deputy Project Director's Office** (Northern Province), **Kovinthankadai Junction, Wilson road, Kilinochchi. (TP No.021-2284881, Fax No. 021-2284880, Email.dpd.np@csiap.lk)**, and inspect the bidding documents free of cost at the same place on working days from **12th July 2022** to **2nd Aug 2022** from **9.00 hrs to 15.00 hrs**.
6. Bidding Document in English Language can be purchased by eligible bidders on the submission of a written application on original Letter Head to the **Deputy Project Director** at the address mentioned in **Item 5** above, and paying a non-refundable fee (Please refer above table for the amount) in Cash only on Working days from **12th July 2022** to **2nd Aug 2022** from **09:00 hrs. to 14:00 hrs (2.00 p.m.)**.
7. To be eligible for Contract award, the successful bidder shall not have been blacklisted and shall meet the requirements in Bidding Document. Furthermore, the successful bidder shall have valid Business Registration and VAT Registration.
8. Manufactures Authorizations letter on prescribed format and/or Certification for Seeds / Planting Material as the case maybe, shall submitted together with the Bid, if not the Bid will be rejected considering as a non - responsive Bid.
9. Pre-bid meeting will be arranged on **19th July 2022 at 9.00 Hrs**, at the place mentioned in **Item 5** above. Prospective bidders are requested to get well conversant with the Bidding Document especially with Specification, ITB, and Contract Data before attending.
10. Bid must be accompanied by an Unconditional Bid Guarantee on prescribe format in the Bidding Document for the value and date mentioned in above Table. Any Bid without a valid Bid Guarantee as indicated will be considered as non-responsive and rejected without any query.
11. All pages of the Bidding Documents shall be signed by the bidder and affixed his seal.
12. The Bids shall submit as the Original and the Duplicate. The original and the duplicate should be Enclosed in separate sealed envelopes and marked as the "Original" and "Duplicate" respectively. Both envelopes shall be enclosed in a sealed single envelope, and write the Description of GOODS and Contract No on top of left hand corner of the envelope.
13. Completed Bids shall either be deposited in the **Tender Box** kept for this purpose or send under registered post address to The Chairman, Regional Procurement Committee (Northern Province), **Climate Smart Irrigated Agriculture Project, Deputy Project Director's Office (Northern Province), Kovinthankadai Junction, Wilson road, Kilinochchi,** to reach on or before **14:00 Hrs. (2.00 p.m.) on 2nd Aug 2022.**
14. Bids shall be closed at **14:00 Hrs. (2.00 pm)** on **2nd Aug 2022** and open immediately**.** Late bids shall not be accepted. Bids will be opened immediately after closing in the presence of the bidders or bidders' representatives who choose to attend. If the office happens to be closed on the bid closing date specified above due to Government Notice, the bid closing date will be the immediate next working day and will be opened at the same time and venue.
15. The decision of the Regional Procurement Committee (Northern province) is final and conclusive. The Department Procurement Committee is empowered to reject single, any or all bids at its own discretion.

**Chairman,**
**Regional Procurement Committee (Northern Province)**
**Climate Smart Irrigated Agriculture Project,**
**Deputy Project Director's Office (Northern Province),**
**Kovinthankadai Junction, Wilson road,**
**Kilinochchi,**

**Date - 2022-07-11**

afc

## தங்கக் கடன் சேவை
## தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 30.04.2022 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 27.07.2022 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தங்கக் கடன் சேவை நிலையங்கள்**

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோ்ஹவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2

**ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:**
**722, கோட்டை வீதிஇராஜகிரிய**
**27.07.2022**

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ்
கம்பனி பி.எல்.சி
செளபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதிஇராஜகிரிய
தொலை : 0115 573600

### கம்பனியொன்றின் பதிவு செய்தலுக்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தலை நாம் இத்தால் வழங்குகின்றோம்.

கம்பனியின் பெயர் : டிஆர். டைலிங் எக்ஸ்செல் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : **PV** 00258005
பதிவு அலுவலகத்தின் முகவரி : இல.: **69/3,** கங்காராம பாதை, பெலென, வெலிகம.
தபாற் குறியீடு : 81000
கம்பனியின் பணிப்பாளர்

### கம்பனியொன்றின் பதிவு செய்தலுக்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிட்டுள்ள கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான அறிவித்தலை நாம் இத்தால் வழங்குகின்றோம்.

கம்பனியின் பெயர் : சோல்ரி சேர்வ் ஹவுஸ் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம் : **PV** 00258050
பதிவு அலுவலகத்தின் முகவரி : இல.: **69/3,** கங்காராம பாதை, பெலென, வெலிகம.
தபாற் குறியீடு : 81000
கம்பனியின் பணிப்பாளர்

### அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பதுளை மெடேரியா வீதி, இல-13ஐச் சேர்ந்த **ஆறுமுகம் கதிரேசன் ஸ்ரீதரன்** (கடவுச் சீட்டு இல. PA7078744) ஆகிய நான் பதுளை மெடேரியா பார் (மெடேரியா வீதி) இல. 13ஐச் சேர்ந்த **ஜானகி விஸ்பநாதன்** (தே.அ.அ. இல. 416820503V) இற்கு என்னால் வழங்கப்பட்ட சட்டத்தரணி மற்றும் பகிரங்க நொத்தாரிசு **A. P. கணபதிப்பிள்ளையினால்** அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2017.02.06ஆம் திகதியிடப்பட்ட அற்றோணி தத்துவ இலக்கம் 6620ஐ நான் இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன். அத்துடன் சொல்லப்பட்ட அற்றோணி தத்துவத்தின் கீழ் இதன் பிறகு மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் பற்றி எந்த வகையிலும் பொறுப்புக் கூறப்படமாட்டாது.

# பெறுகை அறிவித்தல்

## மாகாண கல்வித் திணைக்களம் - வடமத்திய மாகாணம்

## தொழில்நுட்ப கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்
## கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல

### நிதி வழங்குதல் – சர்வதேச அபிவிருத்திக்கான OPEC நிதியத்திற்காக மற்றும் இலங்கை குடியரசு (GOSL)

இங்கு கீழே குறிப்பிடப்படும் செயற்றிட்டத்திற்காக வடமத்திய மாகாண கல்வி திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | விபரம் | கேள்விப் பிணையின் பெறுமதி (இலங்கை ரூபா) | மீளளிக்கப் படாத கட்டணம் (இலங்கை ரூபா) | ஒப்பந்த காலம் நாட்கள் | பதிவுத் தரம் |
|---|---|---|---|---|---|
| 01 | பொ/விஜித மத்திய மாகாண வித்தியாலயத்தின் மூன்று மாடி தொழில்நுட்பபீடம் நிர்மாணம் | 847,000.00 | 5000.00 | 280 நாட்கள் | C04 அல்லது அதற்கு மேல் |
| 02 | அ/ரம்பேவ மத்திய மகா வித்தியாலயத்தின் பாடசாலை கட்டிடம் தொழில்நுட்ப ஆய்வுகூடமாக நவீனமயப்படுத்தல் | 240,000.00 | 5000.00 | 210 நாட்கள் | C06 அல்லது அதற்கு மேல் |
| 03 | அ/புத்தங்கல மகா வித்தியாலயத்தின் உயிரியல் அமைப்பு தொழில்நுட்ப பிரிவு தொழில்நுட்ப ஆய்வுகூடமாக நவீனமயப்படுத்தல் | 190,000.00 | 5000.00 | 210 நாட்கள் | C06 அல்லது அதற்கு மேல் |

01. கேள்வி கோரல் தேசிய போட்டி கேள்வி கோரல் மூலம் நடைபெறும்.

02. கேள்விகள் சமர்ப்பிக்கும் சகல கேள்விதாரர்களும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) பதிவு செல்லுபடியாகும் ஒப்பந்தக்காரராக இருப்பதுடன் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும்.

03. நிர்மாண ஒப்பந்தங்களுடன் சம்பந்தப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களையும் பரீட்சித்தல் அநுராதபுரத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (நிதி) இடம் (தொ.பே.இல-025-2222432, பெக்ஸ் - 025-2222432 மற்றும் மின்னஞ்சல் nepdspro@gmail.com) மற்றும் பொலன்னறுவ வலயக்கல்வி பணிமனையின் கணக்காளரிடம் (தொலைபேசி 027-2226982) அலுவலக நேரங்களில் (மு.ப.9.00 முதல் பி.ப.3.00 இற்கிடையில்) 2022 ஆகஸ்ட் 01 வரை இடம்பெறலாம்.

04. நிர்மாண ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்ட சகல வேலை விபரங்கள் மற்றும் திட்டமிடல் பற்றிய தகவல்களை அநுராதபுரத்தில் அமைந்துள்ள வடமத்திய மாகாணத்தின் மாகாண பொறியியல் திணைக்களத்தின் பாடசாலை கட்டிட வேலை பற்றிய பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ள முடிவதுடன், அவ் அலுவலகத்தின் தொடர்பாடல் வசதிகள் கீழே தரப்பட்டுள்ளது. தொலைபேசி இலக்கம் - 025-2225916.

05. தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு அநுராதபுரம் வடமத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளரிடம் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பித்து மற்றும் பொலன்னறுவ வலயக்கல்விப் பணிமனையின் கணக்காளரிடம் எழுத்து மூல விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்விப்பத்திரங்களை கொள்வனவு செய்ய முடிவதுடன் கேள்விப்பத்திரங்களை விநியோகித்தல் 2022 ஜுலை 11ம் திகதி முதல் 2022 ஆகஸ்ட் 01ம் திகதி வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையாகும்.

06. கேள்விப் பத்திரங்களில் "மூலப்பிரதி" மற்றும் "இரண்டாம்பிரதி" யை வேறுவேறாக உறைகளில் இட்டு பொறியிட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டம் மற்றும் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிட்டு மூலப்பிரதி மற்றும் இரண்டாம் பிரதியை ஒரே உறையில் இட்டு தலைவர், பெறுகைக்குழு, மாகாண கல்வித் திணைக்களம், வடமத்திய மாகாணம், அநுராதபுரம் என்ற முகவரிக்கு குறித்த தினம் குறித்த நேரத்திற்கு முன்பு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் (நிதி) இன் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

07. கேள்விகளின் செல்லுபடியாகும் காலம், தகைமைகள் மற்றும் ஏனைய குறித்த நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகள் கேள்வி ஆவணங்களில் உற்படுத்தப்பட்டுள்ளது.

